உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

விலை 30/=

சிவம் - 02 | விகாரி வருடம் ஆடித் திங்கள் 21ஆம் நாள் 06 ஆகஸ்ட் 2019 | பூமி - 06

## திருக்கேதீஸ்வர ஆலய வீதிவளைவை மீண்டும் அமைப்பதற்கு இந்திய அரசின் அழுத்தம் தேவை

### யாழ்ப்பாணத்தில் இந்து அமைப்புகள் ஒன்றிணைந்து தீர்மானம்

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு செல்லும் வீதியில் உள்ள மாந்தை சந்தியில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவு கடந்த மார்ச் மாதம் சிவராத்திரி தினத்தன்று ஒருசிலரால் உடைக்கப்பட்டமைக்கும், அதனை மீண்டும் அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு தடை விதிக்கப்பட்டமைக்கும் எதிர்ப்பு தெரிவிப்பதற்காகவும், அது தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கூட்டமொன்று கடந்த மாதம் (ஜூலை) 20ஆம் திகதியன்று இந்து மாமன்ற யாழ். பணிமனையில் இடம்பெற்றது.



நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா உட்பட வடமாகாணத்தில் பல பகுதிகளிலுமுள்ள இந்து அமைப்புக்களைச் சேர்ந்த 250 இற்கும் அதிகமானோர் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டனர். திருக்கேதீஸ்வரம் ஆலயம் தற்போது இந்திய அரசின் நிதியுதவியுடன் மறுசீரமைக்கப்பட்டு வருவதனாலும், இந்த ஆலய வரலாறு இந்தியாவுடன் தொடர்புடையதாக இருப்பதனாலும் இதுவிடயத்தில் இந்தியாவின் அனுசரணையை கோருவது என்று இக்கூட்டத்தின்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம், நல்லூரிலுள்ள இந்திய தூதுவராலய துணைத் தூதுவர் ஊடாக இந்தியப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி கூட்டத் தீர்மானத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

**இலங்கையில் இந்துக் கோவில்களின் பாதுகாப்பு தொடர்பாக,**

இந்திய திருநாட்டினால் பெருந்தொகை செலவில் கருங்கற் கோவிலாக நிர்ணயம் செய்யப்பட்டு வரும் திருக்கேதீஸ்வரம் திருக்கோவில் சுற்றாடலில் இந்து மதத்திற்கு இடையூறாக வேற்றுமதக் கோவில்களை உருவாக்கி வருகிறார்கள். இராமாயண காலத்து கோவிலாக கருதப்படும் சிவதலத்தின் மேன்மையைக் காப்பதற்கு உதவுமாறு வேண்டுகிறோம்.

இவ்வருட சிவராத்திரி நாளில் இக்கோவிலுக்குச் செல்லும் வீதியில் அமைக்கப்பட்ட வரவேற்பு வளைவு கத்தோலிக்க மதத்தவர்களால் உடைத்தெறியப்பட்டுள்ளது. இந்த வரவேற்பு வளைவை நிரந்தரமாக கட்டுவதற்கு மன்னார் பிரதேச சபை அனுமதி வழங்கியிருந்தபோதிலும், அது கத்தோலிக்க மதத்தவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. திருக்கேதீஸ்வர திருப்பணியை இந்திய அரசு பொறுப்பேற்று நன்முறையில் செய்து வருகிறது. இந்நிலையில் இவ்வாலயத்தின் எதிர்காலத்தை சீரிய முறையில் இந்து மக்கள் வழிநடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்துதவுமாறு வேண்டுகிறோம்.

**இலங்கையில் பல பாரம்பரிய இந்துக் கோவில்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடையூறுகள்.**

* திருக்கோணேஸ்வரக் கோவில் அபிவிருத்தி செய்யமுடியாமல் அரச தொல்லியல் திணைக்களம் தடுத்து வைத்துள்ளமை.

(தொடர்ச்சி முதலாம் பக்கம்)



**நல்லூர்க் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ்**

# திருகோணமலை சிவபூமி யாத்திரிகர் மடம், மனவிருத்திப் பாடசாலை திறப்புவிழா (14.07.2019)



படங்கள் உதவி: செ.ரவிசாந் (ஊடகவியலாளர்)

சிவபூமி
சிவம் - 02 ஆகஸ்ட் 2019 பூமி - 06

## சிந்தனை செய்வோம்

# தீர்வு இன்றி தொடரும் தமிழர் பிரச்சனை

இலங்கைக்கு 1948 பெப்ரவரி மாதம் கிடைத்த சுதந்திரம் சிறுபான்மை மக்களாகிய தமிழர்களுக்கு பூரண சுதந்திரமாக அமையவில்லை. தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பாக இலங்கையில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் எதுவித அக்கறையும் கொள்ளவில்லை. 1957, 1977, 1983 காலப்பகுதிகளில் இனக்கலவரங்கள் ஏற்பட்டபோது பல ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் அநியாயமாக அழிந் தொழிந்தனர். எண்பதுக்குப் பின் ஏற்பட்ட தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு எதுவித தீர்வும் இல்லாமல் மௌனித்தது.

ஒவ்வொரு தடவையும் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழர்களது விடயத்தில் தீர்வு தருவதாக தேர்தல் களத்தில் கூறிவந்ததே தவிர, ஆட்சிபீடம் ஏறிய பின் அந்த வாக்குறுதி கைவிடப்பட்டதையே காணமுடிகின்றது. கடந்த காலங்களில் தமிழ்க் கட்சிகள் வழங்கிய பூரண ஆதரவுதான், அரசாங்கங்கள் ஆட்சிபீடம் ஏறுவதற்கு உதவியிருந்தன. இலங்கையின் இன்றைய கௌரவ ஜனாதிபதி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு தமிழர்களின் பங்களிப்பே முக்கிய காரணமாக அமைந்தது. பிரதமர் உட்பட இன்று ஆட்சியிலுள்ள அனைவரும் தங்கள் பதவியைத் தொடருவதற்கு தமிழ் பிரதிநிதிகளின் பங்களிப்பு பேருதவியாயிற்று. எனினும், தமிழர்களுக்கு எதுவித தீர்வும் கிட்டாது ஆட்சிபீடத்தில் ஏறியவர்களின் காலம் கடந்து செல்கிறது.

தீர்வு இன்றி தமிழர்களின் கதை தொடர்கிறது. நிபந்தனைகளோடு பேரம்பேசாமல், ஆதரவினைக் கொடுத்துவரும் நம்மவர்கள் நன்றாக ஏமாற்றப்படுகிறார்கள். எங்கள் விதிப்பயனை எவரிடம் சொல்வது?

தமிழ்க் கட்சிகள் ஆதரவுக் கரங்களை வழங்கிய போதிலும், அதோகதியாக ஆட்சியாளர்கள் ஏமாற்றிவிட்டார்கள். தமிழர்களுக்கான தீர்வுகளுக்கு தவணைகள் கொடுக்கும் அரசியல் பண்பாடு தொடர்ந்து கொண்டு இருக்கிறது. தீர்வு விடயத்தில் இந்தியாவும் எதுவும் பேசுவதாக இல்லை. சர்வதேசமும் இதுவிடயம் எதனையும் வெளிப்படுத்துவதாக இல்லை. நோர்வே தூதுவர், ஜப்பானிய தூதுவர் என தீர்வு முயற்சியில் ஈடுபட்டவர்கள் கதைகளும் ஓய்ந்து பத்து ஆண்டுகள் கடந்து விட்டன. தமிழர்களுக்காக இன்று யாருளரோ?

## இம்மாத சிறப்புத் தினங்கள் (ஆகஸ்ட் 2019)

| | | |
|---|---|---|
| 03 | சனி | : ஆடிப் பூரம் |
| 04 | ஞாயிறு | : நாக சதுர்த்தி விரதம் |
| 05 | திங்கள் | : கருட பஞ்சமி |
| 06 | செவ்வாய் | : சஷ்டி விரதம் |
| 09 | வெள்ளி | : வரலட்சுமி விரதம் |
| 11 | ஞாயிறு | : ஏகாதசி விரதம் |
| 12 | திங்கள் | : பிரதோஷ விரதம் |
| 15 | வியாழன் | : பூரணை விரதம் |
| 19 | திங்கள் | : சங்கடஹர கணபதி விரதம் |
| 23 | வெள்ளி | : கார்த்திகை விரதம் |
| 24 | சனி | : ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி |
| 26 | திங்கள் | : ஏகாதசி விரதம் |
| 28 | புதன் | : பிரதோஷ விரதம் |
| 30 | வெள்ளி | : அமாவாசை விரதம் |

## நல்லைக் கந்தன் கொடிச்சீலை கையளிப்பு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழாவுக்கான கொடிச்சீலை வழங்கும் வைபவம் இம்மாதம் 5ஆம் திகதியன்று காலை இடம்பெற்றது.

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள வேல்மடம் முருகன் ஆலயத்தில் இருந்து அலங்கரிக்கப்பட்ட சிறிய இரதம் ஒன்றில் வைத்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு, ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

(அட்டை முன்பக்கத் தொடர்ச்சி)

- கன்னியா வெந்நீர் ஊற்று அருகேயுள்ள இந்துக்களின் புராதன சேத்திரத்தை இடித்து பௌத்த மயமாக்கல்.
- வடக்கு, கிழக்கு பகுதிகளில் பௌத்தர்களின் வசிப்பிடங்கள் இல்லாத இடங்களில் அவசரமாக பௌத்த கோவில்களை உருவாக்கி இந்துக்களைப் புறக்கணித்தல்.
- கீரிமலை நகுலேஸ்வரபுரத்திலுள்ள பழமை வாய்ந்த கிருஷ்ணன் கோவில், சடையம்மா சமாதி, மற்றும் சித்தர்பீடங்களை தரிசிக்க விடாது தடுத்து கடற்படையின் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக இந்து மக்கள் சார்பில் தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறோம். இந்துக்களின் பாரம்பரியமான வழிபாட்டுத் தலங்களுக்கு வந்திருக்கும் ஆபத்தினை நீக்குவதற்கு தாங்கள் இயன்றவரை உதவவேண்டும் என்று அன்போடு வேண்டுகிறோம்.

எங்கள் மண்ணில் நீண்ட காலமாக நிலவிவரும் இனப் பிரச்சனையை சுமுகமாக தீர்த்து நாம் அனைவரும் அமைதியாக வாழ தாங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என நன்றியோடு வேண்டுகிறோம்.

## அலங்காரக் கந்தனின் வருடாந்தப் பெருவிழா

அலங்காரக் கந்தனாக சிறப்பித்துப் போற்றப்படும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இம்மாதம் 6ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

**முக்கிய உற்சவங்களின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 06.08.2019 (காலை) | : | கொடியேற்றம் |
| 15.08.2019 (மாலை) | : | மஞ்சம் |
| 22.08.2019 (மாலை) | : | அருணகிரிநாதர் உற்சவம் |
| 23.08.2019 (மாலை) | : | கார்த்திகை உற்சவம் |
| 24.08.2019 (காலை) | : | சூர்யோற்சவம் |
| 25.08.2019 (காலை) | : | சந்தான கோபாலர் உற்சவம் |
| 25.08.2019 (மாலை) | : | கைலாச வாகனம் |
| 26.08.2019 (காலை) | : | கஜவல்லி மஹாவல்லி உற்சவம் |
| 26.08.2019 (மாலை) | | வேல்விமானம் |
| 27.08.2019 (காலை) | : | தெண்டாயுதபாணி உற்சவம் |
| 27.08.2019 (மாலை) | : | ஒரு முகத் திருவிழா |
| 28.08.2019 (மாலை) | : | சப்பரம் |
| 29.08.2019 (காலை) | : | இரதோற்சவம் |
| 30.08.2019 (காலை) | : | தீர்த்தோற்சவம் |
| 31.08.2019 (மாலை) | : | பூங்காவனம் |

## திருகோணமலையில் சிவபூமி யாத்திரீகர் மடம்

### மனவிருத்திப் பாடசாலை திறப்பு விழா

இலங்கை சிவபூமி அறக்கட்டளையின் மற்றுமொரு செயற்பாடாக திருகோணமலையில் சிவபூமி யாத்திரிகர் மடமும், சிவபூமி மனவிருத்திப் பாடசாலையும் கடந்த மாதம் (ஜுலை) 14ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும், திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் திரு.நா.இராசநாயகம் அவர்களும் இணைந்து கட்டடத்துக்கான பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்ததுடன், கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைச் செயலாளர் திரு.ப.பரமேஸ்வரன் அவர்களும் இணைந்து நாடாவை வெட்டி கட்டடத்தையும் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் சிறப்பு நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது. (இந்த நிகழ்வு சம்பந்தமான சிறப்புத் தொகுப்பும், படங்களும் சிவபூமி பத்திரிகையின் உள்ளே வெளியாகியிருக்கின்றன.)

## தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம்



அருள்மிகு துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் 31ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் நடைபெறவிருக்கிறது.

**முக்கிய உற்சவங்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| 31.08.2019 | (சனி) | கொடியேற்றம் |
| 02.09.2019 | (திங்கள்) | திருமுறைத் திருவிழா |
| 05.09.2019 | (வியாழன்) | திருமஞ்சத் திருவிழா |
| 08.09.2019 | (ஞாயிறு) | வேட்டைத் திருவிழா<br>கைலாச வாகன வீதிவலம் |
| 09.09.2019 | (திங்கள்) | சப்பரத் திருவிழா |
| 10.09.2019 | (செவ்வாய்) | தேர்த் திருவிழா |
| 11.09.2019 | (புதன்) | தீர்த்தத் திருவிழா |
| 12.09.2019 | (வியாழன்) | வைரவர் பொங்கல் |

தேர்த்திருவிழா காலை 9.00 மணிக்கும், தீர்த்தத் திருவிழா காலை 8.30 மணிக்கும் நடைபெறும். மகோற்சவகால பூசை நேர ஏற்பாடுகளின்படி காலை 9.30 மணிமுதல் வசந்த மண்டபப் பூசையும், அதனைத் தொடர்ந்து அம்பாளின் திருவீதியுலாவும், மாலை 5.30 மணிமுதல் வசந்த மண்டபப் பூசையும், அதனைத் தொடர்ந்து அம்பாளின் திருவீதியுலாவும் இடம்பெறும். வைரவர் பொங்கல் (12.09.2019) மாலை 3.00 மணிக்கு இடம்பெறும்.

## செல்வச்சந்நிதி மகோற்சவம்



வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் (ஆகஸ்ட்) 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. செப்ரெம்பர் 12ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 13ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் 14ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

செய்தியின் பின்னணியில்

# திருக்கேதீஸ்வரத்தில் நடந்த சம்பவம் கவலை அளிக்கிறது

## யாழ். மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் பதினொராவது ஆண்டு நினைவு வைபவம் கடந்த மாதம் (ஜூலை) 12ஆம் திகதியன்று தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. மேற்படி வைபவத்தின்போது பார்வையாளராக கலந்து கொண்ட யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் அவர்களை உரையாற்றுமாறு விழாத் தலைவர் வேண்டுகோள் விடுத்தார். திருக்கேதீஸ்வரம் செல்லும் பாதையிலுள்ள வரவேற்பு வளைவை உடைத்தமை பற்றியும், பின் மன்னார் பிரதேச சபை நிரந்தர வரவேற்பு வளைவை கட்டுவதற்கு அனுமதி வழங்கிய போதிலும் கத்தோலிக்க மதத்தவர்களின் கோரிக்கை காரணமாக வளைவு கட்டுவதை நிறுத்தியுள்ளதையும் குறிப்பிட்டு கவலை தெரிவித்ததுடன், யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்கள் இவ்விடயம் தொடர்பாக தலையிட்டு சைவ மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள மனக்கவலையைப் போக்க உதவ வேண்டும் என கலாநிதி ஆறு.திருமுருகன் கேட்டுக்கொண்டார். தலைவரின் வேண்டுகோளை ஏற்று அடிகளார் உரையாற்றினார்.

"இச்சம்பவம் பற்றி கேள்வியுற்று மிகவும் கவலையடைந்தேன். இன்றைய சூழலில் சைவ மக்களும் கத்தோலிக்க மக்களும் ஒற்றுமையாக இருப்பது எமக்கு நன்மையாகும். திருக்கேதீஸ்வரச் சூழலில் வளைவு உடைக்கப்பட்டமை கவலைக்குரியது. எனது பகுதியாக இருப்பின் நான் வரவேற்பு வளைவு கட்டுபவர்களை வரவேற்று என்ன உதவி வேண்டுமென்று கேட்டிருப்பேன். அவர்களுக்கு உணவும் வழங்கி ஒற்றுமையை வெளிக் காட்டியிருப்பேன். இதை விடுத்து பகையை வளர்ப்பது தவறு. சில மாதங்களுக்கு முன்பு நான் மன்னார் போயிருந்தபோது சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த திருக்கேதீஸ்வரத்தைப் பார்ப்பதற்குச் சென்றிருந்தேன். பாதையில் பாலம் கட்டும் வேலை நடந்ததால் மற்றைய பாதையால் சென்று திருக்கேதீஸ்வரத்தைச் சுற்றிப்பார்த்து வந்தேன். இவ்விடயம் தொடர்பாக பிரச்சனைகள் தொடராமல் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறேன். எமக்கு சமீபமாக சைவக் கோவில் உண்டு. நாமும் அவர்களும் மிகவும் அன்னியோன்னியமாக இருக்கிறோம்.

இன்று இந்த வைபவத்திற்கு நான் வருகை தந்தது மகிழ்ச்சியைத் தருகிறது. நான் இளவாலையில் பணியாற்றிய காலத்தில் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரோடு பழகும் வாய்ப்புப் பெற்றேன். அவர்களின் சமூக சேவையை நான் என்றும் உயர்வாக மதிக்கிறேன். அம்மையார் எல்லா மதத்தவர்களோடும் மிகவும் அன்பாகப் பழகினார். இன்று அவர் பாதையில் தொண்டாற்றும் நண்பர் கலாநிதி ஆறு. திருமுருகனை நான் நன்கு அறிவேன். அவர்களும் சிறந்த சேவையாற்றி வருகிறார். இந்த மாதிரியான அன்பும் நட்பும் தொடரவேண்டும். திருக்கேதீஸ்வர பிரச்சனை அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களால் ஒற்றுமையாகத் தீர்க்கப்படவேண்டும்" என்று ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தனது உரையில் குறிப்பிட்டார்.

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் குருபூசை நிகழ்வு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் பதினொராவது குருபூசை வைபவம், கடந்த மாதம் (ஜூலை) 12ஆம் திகதியன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பமாக ஆலயத்தில் பூசை வழிபாடுகளுடன், அன்னையின் நினைவாலயத்தில் வேதபாராயணம், உருவச்சிலை வழிபாடு என்பனவற்றுடன் திருமுறை மடத்தில் பூசை வழிபாடு, திருமுறை பாராயணம் இடம்பெற்றதைத் தொடர்ந்து அன்னபூரணி மண்டபத்தில் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

தேவஸ்தான செயலாளர் திரு.நா.தவநாதன் அவர்கள் வரவேற்புரையையும், தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சு.செந்தில்ராஜக் குருக்கள், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தான ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் பிரார்த்தனை உரைகளையும், அவுஸ்திரேலியா வைத்திய நிபுணர் வ.மனோமோகன் அவர்கள் வாழ்த்துரையையும் நிகழ்த்தினார்கள்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா அவர்கள் 'ஈழத்து சைவ சமய சொற்பொழிவு மரபில் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் வகிபாகம்' எனும் பொருளில் சிறப்புரையாற்றினார்.

(தொடர்ச்சி மறுபக்கம்)

அம்மையாரின் குருபூசை நிகழ்வின்போது மூத்த சிவாசாரியார்கள் நால்வர் தேவஸ்தானத்தால் கௌரவிக்கப்பட்டார்கள். திருநெல்வேலி சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் பாலசந்திரக் குருக்கள், குப்பிளான் சிவஸ்ரீ சிவசாமி ஐயர் குமாரராஜக் குருக்கள், சுழிபுரம் பறாளை பிரம்மஸ்ரீ முத்துச்சாமிஐயர் பாலகுருசாமி சர்மா, மட்டுவில் சிவஸ்ரீ கிருஷ்ணசாமிக் குருக்கள் சதாசிவக் குருக்கள் ஆகியோரே எம் மண்ணில் ஆற்றிய இறைபணியை போற்றிப் பாராட்டும் வகையில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

## நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை ஓராண்டு நிறைவு

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை தோற்றம் பெற்று ஓராண்டு நிறைவு வைபவமும் திருவாசக விழாவும் கடந்த மாதம் (ஜூலை) 12ஆம் திகதியன்று மாலை நடைபெற்றது. சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது சிவபூமி அறக்கட்டளை உறுப்பினர் திரு.வி.ஸ்ரீவிசாகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். தமிழ்நாடு திருமுருகன்பூண்டி திருமுருகநாதசுவாமி திருமடம் முதல்வர் தவத்திரு சுந்தரதாச அடிகளார் சிறப்புரையாற்றினார்.

இதன்பின், அவுஸ்திரேலியா, சிட்னி வைத்திய கலாநிதி வ.மனோமோகன் அவர்களும், பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும், யாழ். இந்திய தூதரக துணைத் தூதுவர் கௌரவ சங்கர் பாலச்சந்திரன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிகழ்வின் சிறப்பு அம்சங்களாக இந்தியா, தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த மூத்த ஓதுவார் திருமுறைக்கலாநிதி திருத்தணி என்.சுவாமிநாதன் அவர்கள் வழங்கிய திருவாசக இசை அரங்கும், பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவர்கள் வழங்கிய 'கூத்தன் இவ்வானும் குவலயமும்' எனும் பரதநாட்டிய அரங்கும் இடம்பெற்றன.

சிவபூமி திருவாசக அரண்மனை ஓராண்டு பூர்த்தி சிறப்பு மலரும் மேற்படி நிகழ்வின்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

## சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் கும்பாபிஷேகதின ஓராண்டு பூர்த்தி

நாவற்குழி திருவாசக அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் மற்றும் இங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கருங்கல்லிலான 108 லிங்கங்களுக்கும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டதன் ஓராண்டு பூர்த்தி சிறப்பு வழிபாடும், 1008 சங்காபிஷேகமும் கடந்த மாதம் (ஜூலை) 13ஆம் திகதியன்று காலை இடம்பெற்றன.

சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் பிரதம குரு சிவஸ்ரீ ம.நிருபன் குருக்கள் மற்றும் குருமார்கள் சங்காபிஷேகம் மற்றும் சிறப்பு பூசை வழிபாடுகளை நடத்தி வைத்தார்கள். இந்தியா தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த மூத்த ஓதுவார் திருமுறைகலாநிதி திருத்தணி என்.சுவாமிநாதன் அவர்கள் வழங்கிய திருவாசக இசை நிகழ்ச்சியும் நிகழ்வில் இடம்பெற்றது.

## யாழ். போதனா வைத்தியசாலையில் மீள்வாழ்வு சிகிச்சை நிலையம்


யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிசிறந்த வசதிகளுடனான நவீன கட்டமைப்பு மீள்வாழ்வு சிகிச்சை நிலையமொன்று கடந்த மாதம் (ஜூலை) 25 ஆம் திகதியன்று சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

குவைத் நாட்டு மக்களினால் வழங்கப்பட்ட பெருந்தொகையான நிதியுதவியுடன் குவைத் செம்பிறை சங்கத்தினால் இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி திறப்பு விழாவின் போது சுகாதார மற்றும் சுதேச போசணை, சுதேச வைத்திய அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்ன, இலங்கைக்கான குவைத் நாட்டின் தூதுவர் கலாவ் பூதா.்யர், குவைத் செம்பிறை சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி ஹிலால் முசேட் அல்சேயர் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்தில் என்பு முறிவு, மூட்டுக்களில் ஏற்படும் பாதிப்பு, நீண்டகாலமாக படுக்கையில் உள்ளவர்களுக்கான சிகிச்சைகள் மற்றும் கை, கால்களை இழந்தவர்களுக்கான மீள்வாழ்வு சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த வருடம் (2018)ஜூலை மாதம் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் ஒரு வருட காலத்திற்குள் மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் பூர்த்தியாகி திறந்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எந்த மாவட்டத்திலும் இல்லாத அதிசிறந்த நவீன வசதிகளை யாழ். போதனா வைத்தியசாலை மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

## நகுலேஸ்வரத்து நந்தி நற்பேறடைந்தது



கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வந்த காளை மாடு (நந்தி) கடந்த மாதம் (ஜுலை) 28ஆம் திகதியன்று இப்பூவுலகை விட்டுப் பிரிந்தது. கடந்த ஏழு வருடங்களாக இந்த காளை மாடு, ஆலயத்திற்கு வருகை தந்த ஏராளமான அடியார்களின் தரிசனத்திற்குரியதாக இருந்து வந்தது.

பெருமைக்குரிய வகையில் விளங்குவதுடன், பலராலும் போற்றப்படும் இந்த காளை மாட்டின் வரலாற்றுடன் இணைந்த வகையில் சுவாரஸ்யமான கதையொன்று உள்ளது.

நல்லின மாட்டின் இனப்பெருக்கத்திற்காக திருநெல்வேலி கால்நடை வைத்தியசாலையில், நீண்டகாலமாகப் பராமரிக்கப்பட்டு வந்த இந்தக் காளைமாடு ஏலத்தில் விற்கப்பட்டபோது அதனை முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் வாங்கியிருந்தார். அதனை இறைச்சிக்காக வெட்டுவதற்கு முன்பாக, காளைமாட்டின் படத்துடன் துண்டுப் பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டதுடன் அதனை காட்சிப்படுத்தியிருந்தார்.

இதனை அறிந்த பல சைவ அன்பர்கள் இதற்கு தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். அன்றைய யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களும் இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கு தடை விதித்தார். யாழ்.நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. காளை மாட்டை யாழ்.வர்த்தகர் சங்கம் குறிப்பிட்ட முஸ்லிம் வர்த்தகரிடமிருந்து விலைகொடுத்து வாங்கி, கீரிமலை நகுலேஸ்வரத்தில் வைத்து பராமரிக்கும்படி நீதிமன்றம் திர்ப்பளித்தது. இதன்படி 2012ஆம் ஆண்டு மே மாதத்தில் காளை மாடு அங்கு கொண்டு செல்லப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது என்பது வரலாற்றுப் பதிவாகும்.

## அமரர் பாலா நினைவுப் பேருரை

அகில இலங்கை இந்து மாமன்ற முன்னாள் தலைவர் அமரர் வே.பாலசுப்பிரமணியம் அவர்களது 28ஆவது ஆண்டு நினைவுப் பேருரை இம்மாதம் 3ஆம் திகதியன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

## பலாலியிலிருந்து செப்ரெம்பர் மாதம் இந்தியாவிற்கு விமான சேவை

யாழ். பலாலி விமான நிலையத்தின் சீரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் கடந்த மாதத்திலிருந்து இடம்பெற்று வருகின்றன. ஓடுபாதை புதுப்பிக்கப்படுவதுடன் தற்காலிக விமான பயணக் கட்டுப்பாட்டு கோபுரமும் அமைக்கப்பட்டு வருகிறது.

விமான ஓடுபாதை சுமார் 70 பயணிகளை ஏற்றிச் செல்லும் பெரிய விமானங்களை உள்வாங்கக் கூடியதாக இருக்கும். 3800 மீற்றர் கொண்டதாக ஓடுபாதை அமையவிருக்கிறது.

பலாலி விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமானங்களை இயக்குவதற்கு சர்வதேச வான் போக்குவரத்துச் சங்கம் (International Air Transport Association IATA) அனுமதி வழங்கியுள்ளது. பலாலி விமான நிலையம் 'யாழ்ப்பாணம் காங்கேசன்துறை விமான நிலையம்' என்றே சர்வதேச விமான சேவைப் பதிவில் இடம்பெற்றுள்ளது.

முதற்கட்டமாக, தென்னிந்திய நகரங்களுக்கு விமான சேவைகளை ஆரம்பிக்கும் நோக்கில் பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்தும் நடவடிக்கைகளே இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரும்பாலும், செப்ரெம்பர் மாதத்திலிருந்து இந்தியாவிற்கான விமான சேவை ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## யாழ்ப்பாணத்தில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 27ஆம் திகதி முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை புத்தகக் கண்காட்சியொன்று நடைபெற இருக்கிறது.

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைய, இலங்கை புத்தக விற்பனையாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். புத்தகக் கண்காட்சி இடம்பெறுகிறது. இதில், பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், உள்ளூர் மற்றும் இந்திய மூத்த எழுத்தாளர்களின் புத்தகங்கள் உட்பட பல்வேறு புத்தகங்கள் காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்து மாமன்றத் தலைவர் திரு.மா. தவயோகராஜா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வின்போது யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள் "வாழ்வின் ஆதாரங்கள்" என்ற பொருளில் பேருரையாற்றினார்.

# இந்து - பௌத்த மக்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படவேண்டும்

**யாழ். நாகவிகாரை விகாராதிபதி கருத்து**

"பௌத்த மதத்திற்கும் இந்து மதத்திற்கும் தலைமை இல்லை. தர்மம்தான் இரு மதங்களுக்கும் தலைமை. இந்த இரு சமயங்களுக்குமிடையில் பிரிவுகள் இல்லை. இந்து சமயத்திலிருந்தே பௌத்த தர்மம் உருவானது. பௌத்த சமயத்தின் காவல் தெய்வங்களாக இந்து சமய கடவுள்களே இருக்கின்றனர். எந்த விகாரைக்கும் சென்றாலும் இந்து சமய கடவுள்களை பார்க்கலாம்".

இவ்வாறு யாழ்.நாகவிகாரை விகாராதிபதி ஸ்ரீவிமல தேரர், இம்மாதம் 2ஆம் திகதியன்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், "பௌத்த சமயங்களுக்கு இடையில் முரண்பாடுகள் திணிக்கப்படுகின்றன. அதற்கு ஒரு சில பௌத்த பிக்குகளே காரணம். அந்த ஒருசில பௌத்த பிக்குகளின் செயற்பாடுகள் பௌத்த சமயத்தின் நிலைப்பாடாக அமையாது. அது பௌத்த சமயத்தின் நிலைப்பாடும் அல்ல.

யாழ்.நாகவிகாரை வடக்கு - தெற்கு மக்களுக்கு இடையில் உறவுப் பாலமாக அமைந்துள்ளது. அந்தவேளையில் இந்து - பௌத்த மக்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உண்டாக்கும் பொறுப்பை நாம் எடுப்போம். யாழ். மாவட்டத்தில் பௌத்த சமயத்தின் பெயரால் இந்து சமயத்திற்கு பங்கம் விளைவிக்கப்படாது. அவ்வாறு விளைவிக்கப்பட்டால், அதனை எதிர்க்கும் முதலாவது ஆள் நானாகவே இருப்பேன்.

இந்து சமயத்தை பௌத்தர்களும், பௌத்த சமயத்தை இந்துக்களும் பாதுகாக்க வேண்டும். அதுபோல இந்து சமய மக்கள் பிறமதங்கள் மீது வைக்கும் நம்பிக்கையை பௌத்த சமயத்தின் மீதும் வைக்க வேண்டும். அதுவே இரு சமயங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்" என்றார்.

## கீரிமலையில் நீத்தார் நினைவு நிகழ்வு



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் வழமைபோல இவ்வருடமும் ஆடி அமாவாசை தினமான கடந்த மாதம் (ஜூலை) 31ஆம் திகதியன்று காலை கீரிமலை சிவபூமி மடத்தில் நீத்தார் நினைவு சிறப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின்போது, மாமன்றத்தை தலைமை தாங்கி வழிநடத்திய தலைவர்கள், மாமன்றம் தலை நிமிர வாரி வழங்கிய கொடை வள்ளல்கள், மாமன்றத் தலைமையகத்தை நிர்மாணித்த சிற்பக் கலைஞர்கள், ஆன்மீக வழிகாட்டிய அருளாளர்கள், மாமன்றத்தில் முக்கிய பதவிகளிலிருந்து வழிகாட்டிய செம்மல்கள், பல்வேறு பொறுப்புக்களை ஏற்று அரும்பணியாற்றிய முகாமைப் பேரவைத் தொண்டர்கள் என அமரத்துவமடைந்த பலரது உருவப் படங்கள் தாங்கிய பதாகை தொங்கவிடப்பட்டு, அதன் முன் சுடர் விளக்கேற்றி வைத்து நினைவு கூரப்பட்டார்கள்.

## பேராசிரியர் மு.சின்னத்தம்பி மறைவு



இந்திய வம்சாவளி மலையக சமூகத்தின் முதற் பேராசிரியர் என்ற பெருமைக்குரிய மு.சின்னத்தம்பி அவர்கள் கடந்த மாதம் (ஜூலை) 27ஆம் திகதி தனது 79ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

இவர், கண்டி மாவட்டம் ரங்கல எனும் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். இங்குள்ள பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், தலவாக்கலை அரச சிரேஷ்ட பாடசாலையில் க.பொ.த சாதாரண தரம் வரையும், யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் உயர்தரத்திலும் கல்வி பயின்று 1961ஆம் ஆண்டில் பேராதனை பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி, பொருளியலை சிறப்புப் பாடமாக தொடர்ந்தார். 1965ஆம் ஆண்டு உதவி விரிவுரையாளராகும் சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்தது.

இரண்டு வருடங்களில் நிரந்தர விரிவுரையாளரானார். 1969இல் இங்கிலாந்தின் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் முதுமாணி பட்டத்தை பெற்றார். 1974இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக நியமனம் பெற்ற இவர், 1993ஆம் ஆண்டு பொருளியல்துறை பேராசிரியராகவும், 1997இல் துறைத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். 2006ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

சிறப்புத் தொகுப்பு

# கிழக்கிலங்கையிலும் ஆரம்பமான சிவபூமி அறக்கட்டளையின் பெரும்பணி

வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும், பாடல் பெற்ற திருத்தலமாகவும் விளங்கும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்களின் நன்மை கருதி இலங்கை சிவபூமி அறக்கட்டளையால் திருக்கோணமலையில் சிவபூமி யாத்திரிகர் மடம், சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை ஆகியன சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுச் சிறப்புமிக்க மேற்படி நிகழ்வு கடந்த ஆடி மாதம்-14 ஆம் திகதி முற்பகல் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலனசபை பணிமனை வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது.

விருந்தினர்கள் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மங்கள வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் திரு.நாகராசா இராசநாயகம் ஆகியோர் இணைந்து மேற்படி கட்டடத்துக்கான பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் திருக்கோணேஸ்வர பரிபாலன சபையின் செயலாளர் திரு.பரஞ்சோதிப்பிள்ளை பரமேஸ்வரன் ஆகியோர் இணைந்து நாடா வெட்டி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தனர்.

இதன்பின் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் சிறப்பு நிகழ்வுகள் ஆரம்பமானது.

தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த பிரபல ஓதுவார் திருமுறைக்கலாநிதி திருத்தணி என். சுவாமிநாதன் அவர்களின் திருமுறை ஓதுதலுடன் ஆரம்பமான நிகழ்வில் திருக்கோணேஸ்வர ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ முத்துக்குமாரசுவாமி குருக்கள் சண்முகரத்தினக் குருக்கள், தமிழ்நாடு திருமுருகன் பூண்டி திருமுருகநாதசுவாமி திருமடத்தின் முதல்வர் தவத்திரு சுந்தரதாச அடிகளார் ஆகியோர் ஆசியுரைகளை நிகழ்த்தினர்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரிலிருந்து வருகை தந்திருந்த வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி வ. மனோமோகன் வாழ்த்துரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து திருகோர்ணமலை நகராட்சி மன்றத் தலைவர் திரு.நாகராசா இராசநாயகம் மற்றும் சிவபூமி அறக்கட்டளையின் நிர்வாகசபை உறுப்பினர் திரு.மகேசன் தயாகரன் ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன.

மேற்படி விழாவில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப செயலாளரும், சட்டத்தரணியுமான திரு.நீலகண்டன் பிரணவன், திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகிகள், தொண்டர்கள், சிவபூமி அறக்கட்டளையின் உறுப்பினர்கள், யாழ். குடாநாட்டிலிருந்து வருகை தந்திருந்த தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகிகள், துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள், ஆசிரியர்கள், துர்க்காபுரம் பெண்கள் தொண்டர் சபையினர், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தவர்கள், கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முத்தோர்கள், பணியாளர்கள், கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், பல்துறை சார்ந்தவர்கள், ஆர்வலர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடம், சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை ஆகியவற்றை நேர்த்தியான முறையில் நிர்மாணித்த திரு.இராசமாணிக்கம் கிருபைராஜன், திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் திரு.நாகராசா இராசநாயகம், நகராட்சி மன்ற முன்னாள் தலைவர், அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரிலிருந்து வருகை தந்திருந்த வைத்தியகலாநிதி வ.மனோமோகன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப செயலாளரும், சட்டத்தரணியுமான திரு.நீலகண்டன் பிரணவன், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் விசேடமாக கௌரவிக்கப்பட்டனர்.

இந்த விழாவில் திருக்கோணேஸ்வர ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ முத்துக்குமாரசுவாமி குருக்கள் சண்முகரத்தினக் குருக்கள் ஆசியுரை வழங்கும்போது,

"சிவபூமி அறக்கட்டளையினரால் திருக் கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடமும், சிறுவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையும் நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் கைங்கரியங்கள் இனிதே நிறைவுபெற ஒத்துழைத்த சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனுக்கும், சிவபூமி அறக்கட்டளையைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும், ஆலய நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வரப் பெருமான் அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்" என்றார்.

விழாவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திருமுருகன் பூண்டி திருமுருகநாதசுவாமி திருமடத்தின் முதல்வர் தவத்திரு சுந்தரதாச அடிகளார் ஆசியுரை வழங்கும்போது,

''வெவ்வேறு விதமான பெயர்களில் பாடசாலைகள், முதியோர் இல்லங்கள், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லங்கள் அமைக்கப்பட்டு வரும் நிலையில் ஒரு அற்புதமான பெயரை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தேர்த்தெடுத்துள்ளார். அதுதான் சிவபூமி அறக்கட்டளை நிறுவனம். இந்தப் பூமி முழுவதும் சிவத்துக்கே சொந்தமான பூமி என்பதால் இந்தப் பெயரும் மிகவும் பொருத்தமானதொரு பெயராகக் காணப்படுகிறது.

அரசர் காலத்தில்தான் அரண்மனையைக் கண்டார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் தற்காலத்தில் திருவாசகத்துக்கென ஒரு அரண்மனையைக் கண்டிருக்கிறார்கள். நாம் யாழ்ப்பாணம் நகரத்துக்குள் செல்லும் நுழைவாயிலில் திருவாசக அரண்மனை அமைந்திருப்பது சைவத்தமிழ் உலகிற்கே சிறப்புச் சேர்ப்பதாக உள்ளது.

அதேபோன்றுதான் திருகோணமலையில் சிவபூமி அறக்கட்டளை நிறைவேற்றியுள்ள திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடம், சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை என்பன அவசியமானதொரு பணி. சிவபூமியில் பிறந்த அனைத்து மக்களுக்கும் சிவபூமி அறக்கட்டளையினரின் நற்பணிகள் சென்றடைய வேண்டும்.

யாழ்ப்பாணத்தை திருவாசக பூமியாக மாற்றியிருக்கின்ற செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும், அவருக்குத் துணை நிற்கின்ற நிர்வாகத்தவர்களும், இந்த அறக்கட்டளையில் இணைந்து இரவு பகலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அனைத்து அன்புள்ளங்களும் எல்லா வளங்களும் பெற்று எங்களது குரு முதல்வர் பேரூர் தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளாரின் குருவருளும், தன்னார்ந்த இறை திருவருளும் கிடைக்க வேண்டும் என்பதுடன், இவ்வாறான தெய்வத் திருப்பணிகள் நாடுமுழுவதும் விஸ்தீரணமடைய வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்" என்றார்.

மேற்படி விழாவில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையுரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"இலங்கையின் அழகுபூமியாக விளங்குவது திருகோணமலை. இயற்கை அழகுமிகு திருகோணமலையின் சிகரமாக விளங்குவது சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருக்கோணேஸ்வரம். பஞ்ச ஈஸ்வர தலங்களில் மிக முக்கியமான கோயில். பாடல்பெற்ற திருத்தலம். இந்தப் புண்ணிய தலம் அந்நியரால் அழிக்கப்பட்டு பின்னர் போரழிவுகளைச் சந்தித்த போதும் இன்றுவரை கோணநாதப் பெருமானின் பெருமையைக் காப்பாற்றுகின்ற திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகத்தவர்களையும், இங்கு வாழும் சைவ அன்பர்களையும் முதற்கண் நன்றியுணர்வுடன் நான் வாழ்த்துகின்றேன்.

நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்தாலும் திருக்கோணேஸ்வரர் திருத்தலத் தேவாரத்தை துர்க்கை அம்மன் கோயிலில் எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருநாளும் பாடுவார்கள். கோணேஸ்வரம் பற்றிய சிந்தனைகள் யாழ்ப்பாணத்திலுண்டு. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டு வரும் அருள் ஒளி சஞ்சிகையை திருக்கோணேஸ்வரர் கோயிலுக்குச் சமர்ப்பணமாக வெளியிடுகிறோம்.

அகில இலங்கை இந்து மாமன்றம் திருக்கோணேஸ்வரர் திருத்தலத்தைச் சிறப்பித்து மலர் வெளியிட்டு பேருதவி புரிந்தது. அதுமட்டுமல்லாமல் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைச் செயலரும், முன்னாள் தலைவர் கந்தையா நீலகண்டன் அவர்களின் இளைய புத்திரனுமான சட்டத்தரணி நீலகண்டன் பிரணவன் அவர்கள் கன்னியா வெந்நீரூற்று வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

திருக்கோணேஸ்வரர் ஆலயச் சூழல், அதன் தெய்வீகத் தன்மை ஆகியவற்றைக் கடைசி வரை காப்பாற்ற வேண்டும் என்பதில் இலங்கையில் வாழ்கின்ற சைவப்பெருமக்கள் மட்டுமல்ல புலம்பெயர்ந்து உலகம் முழுவதும் வாழ்கின்ற சைவத்தமிழ் மக்களும் மிகுந்த ஆவலாகவுள்ளனர்.

திருக்கோணேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத்துக்கு வருகை தர வேண்டுமென ஆலய பரிபாலன சபைத் தலைவர் அருள் சுப்பிரமணியம் அவர்கள் சிறியேனை அழைத்திருந்தார். நானும், அமெரிக்க ஹவாயைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் இங்கு வருகை தந்தோம். வந்த பின்னர்தான் திருக்கோணேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத்துக்கு வருகை தந்த பக்தர்கள் தங்குவதற்கு இடவசதியில்லை என்ற விடயம் தெரியவந்தது. இந்நிலையில் ஆலயச் சுற்றாடலிலுள்ள கிறிஸ்தவர்களின் தனியார் விடுதியொன்றில் நாம் தங்கினோம்.

அதிகாலை ஐந்து மணியளவில் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று வணங்கியபோது பக்தர்கள் தங்குமிடமில்லாமல் கஷ்டப்பட்டமையைப் பார்த்தபோது மனதிலே ஓர்

எண்ணம் வந்தது. என்றோ ஒருநாள் கோணேஸ்வரர் ஆலயத்திற்கொரு மடம் கட்ட வேண்டுமென்ற எண்ணம் வந்தது. ஆலயத்தில் கும்பிட்டுக் கொண்டிருந்த போது பரமலிங்கம் ஐயா என்ற அன்பர் தொலைபேசி அழைப்பெடுத்து ஒரு இலட்சத்து முப்பத்தைந்து ஆயிரம் ரூபா நிதியை கிளிநொச்சியிலுள்ள சிவபூமி பாடசாலை நிர்மாணிப்பதற்குத் தருவதாக கூறினார்.

இதன்பின்னர் ஆலயத்தில் வழிபாடுகளை முடித்த பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது என்னுடன் கூட வந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் முதலானோருக்கு கூறினேன். இதுதொடர்பாக பின்னர் கோணேஸ்வரர் ஆலய பரிபாலனசபையினரிடம் கேட்டபோது அவர்கள் தொல்லியல் திணைக்களம் ஒரு மரத்தின் கொப்பை வெட்டியதற்கே எங்களுடைய தலைவரை கொண்டு சென்று தடுப்புக் காவலில் வைக்குமளவுக்கு நிலைமை காணப்படுகிறது. எனவே, மடம் கட்ட முடியாதெனக் கூறினர்.

ஆனால், நான் எப்படியாவது அடையவர்களுக்கென ஒரு மடம் கட்ட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாகவிருந்தேன். அதிபராகவிருந்த, என்னுடன் படித்த நண்பர் கருணாகரனிடம் மடம் கட்டுவதற்கு காணி பார்க்குமாறு கூறினேன். இரண்டொரு காணிகள் பார்த்தோம். ஆயினும், அந்தக் காணிகள் மடம் கட்டுவதற்குப் பொருத்தமற்றதாக இருந்தன.

அப்போது எங்களிடம் மடம் கட்டுவதற்கான பணம் கையிலிருக்கவில்லை. ஆனால், நல்ல எண்ணம் மட்டுமே இருந்தது. அப்போதுதான் எதிர்பாராத விதமாக சுவிஸ் நாட்டிலுள்ள சூரிச் சிவன் கோவிலில் பத்துநாட்கள் சொற்பொழிவாற்றுவதற்காக நான் சென்றிருந்தேன். அங்கு செல்கின்றபோதே நானொரு முடிவெடுத்தேன். அங்கே கிடைக்கின்ற பணம் கோணேஸ்வரப் பெருமானுக்குத்தான். காணிக்கையாக ஏதாவது நல்லது செய்ய வேண்டுமென்பதே அந்த முடிவு.

சொற்பொழிவு கேட்பதற்காக வருகை தந்திருந்த எனது மாணவர்கள், நண்பர்கள், அன்பர்கள் பணத்தை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்கள். இவ்வாறு சேர்ந்த பணத்தையும், சூரிச் சிவன் கோவில் அறங்காவலர் சபையினரது சுமார் இருபத்தைந்து இலட்சம் ரூபாவையும் அடிப்படையாக வைத்து திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடம், சிவபூமி சிறுவர் மனவிருத்.திப் பாடசாலை ஆகியவற்றின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தவேளையில் சூரிச் சிவன் கோவில் அறங்காவலர் சபையினருக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த வேளையில்தான் திருக்கோணமலையைச் சேர்ந்த மனவளர்ச்சி குறைந்த பிள்ளையொன்றை யாழ்ப்பாணம் கோண்டாவிலிலுள்ள சிவபூமி மனவிருத்திப் பாடசாலையில் சேர்த்தார்கள். குறித்த பிள்ளையின் பெற்றோருடன் பேசியபோது திருகோணமலையில் மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளுக்கென பாடசாலை இல்லாத காரணத்தால் நாங்கள் குடும்பமாக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளோம் என்று கூறினார்கள்.

இதன்பின்னர்தான் சிவபூமி யாத்திரிகர் மடத்துடன் இணைந்த வகையில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையையும் திருகோணமலையில் உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு உதயமானது. இந்த விடயத்தை சிவபூமி அறக்கட்டளையின் நிர்வாகத்திலுள்ளவர்களுக்கு எடுத்துச் சொன்னபோது, தலைவருக்கு அதிக ஆசை எனவும், நீங்கள் அவசரப்படுகிறீர்கள் எனவும் எடுத்துச் சொன்னார்கள். முதலில் கிளிநொச்சியில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை நிர்மாணப் பணிகள் முடியட்டும் எனவும் கூறினார்கள்.

ஆனால், கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலையை நிர்மாணிப்பதற்கு ஒரு அன்பரே முழுப் பணத்தையும் தருவதற்கு இணங்கியமையால் சுவிஸ் நாட்டில் கிடைத்த இருபத்தைந்து இலட்சம் ரூபா பணமும் திருக்கோணேஸ்வரர் திருப்பணிக்குத்தான் என்பதில் உறுதியாகவிருந்தேன்.

இந்த நிலையில்தான் இந்த ஆலயத்தின் அறங்காவலர் சபைக்கு நான் இதுதொடர்பாக ஒரு கடிதம் எழுதினேன். அவர்கள் எனது கடிதத்தை ஏற்று காணியொன்றைத் தருகிறோம். நீங்கள் வருகை தந்து காணியைப் பாருங்கள் என்று பதில் எழுதியிருந்தார்கள். இந்தக் கடிதம் கிடைத்ததும் நான் அதிகாலை மூன்று மணிக்கே நித்திரையால் எழுந்து நானே கார் ஓடி திருகோணமலை வந்து சேர்ந்தேன். அப்போது அவர்கள் மகிழ்ச்சியுடன் காணியைக் கட்டினார்கள்.

காணியின் முன்பாக சிறியதொரு கட்டடமிருந்தது. அதனை இடிக்கலாமென கூறினார்கள். எனக்குப் பெருமகிழ்ச்சி. ஒரு மாதத்தில் அத்திபாரம் போடப்பட்டது. கோணேஸ்வரர் ஆலய அறங்காவலர் சபை நிர்வாகத்தைச் சேர்ந்த அனைவரும் ஒத்துழைத்தார்கள். கட்டடப் பணிகள் ஆரம்பமாகி வேகமாக நடைபெற்றன. இந்த நிலையில் வெளிமாவட்டப் பாடசாலை மாணவர்கள் வருகை தந்தால் தங்குவதற்கு வசதியாக கட்டடத்தின் மேலே ஒரு மொட்டைமாடியை எங்கள் நிர்வாகம் பொறுப்பெடுத்துச் செய்யும் எனவும், நீங்கள் ஏனைய வேலைகளைச் செய்யுங்கள் எனவும் ஆலய நிர்வாகத்தவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த நிலையில்தான் சிவபூமி யாத்திரிகர் மடம் மேல்மாடியிலும், சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை கீழ்த் தளத்திலும் நவீன வசதிகள் கொண்டதாக அமைக்கப்பட்டுப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன. சுவிஸ் நாட்டுக்கு சொற்பொழிவு ஆற்றுவதற்காகச் சென்றபோது கிடைத்த பணத்துடன் வெளிநாடுகளுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றியபோது கிடைத்த பணமுமாக சுமார் நூற்றிமுப்பத்தைந்து ரூபா செலவில் மேற்படி பணிகள் நிறைவேறியுள்ளன.

ஆகவே, சூரிய சந்திரர் உள்ளவரை திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு அனைத்து மாவட்டங்களில் இருந்தும், புலம்பெயர் தேசங்களில் இருந்தும் பெருமளவான யாத்திரிகர்கள் வருகை தந்து இங்கு தங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு" என்றார்.

மேற்படி விழாவில் கலந்துகொண்ட திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் திரு.நாகராசா இராசநாயகம் உரையாற்றுகையில்,

"திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடம், சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை ஆகியவற்றின் விஸ்தீரணத்திற்காக எதிர்காலத்தில் காணிகள் தேவைப்படுமிடத்து அதற்கான ஒழுங்குகளை திருகோணமலை நகராட்சி மன்றம் ஏற்படுத்தித் தரவேண்டுமென செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தனது உரையின் போது தெரிவித்திருந்தார். அவ்வாறான தேவைகள் ஏற்படும் பட்சத்தில் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதற்கு நான் தயாராகவிருக்கின்றேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் யாத்திரிகர் மடமொன்று இல்லாமலிருந்தமை இதுவரை காலமும் ஒரு பெரும் குறைபாடாகவிருந்து வந்தது. உண்மையில் இந்த யாத்திரிகர் மடம் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு அண்மையிலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக ஒரு சிறு அத்திபாரத்தைக் கூட போட முடியாத நிலைமையே காணப்படுகிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.


திருக்கோணேஸ்வரர் ஆலய அபிவிருத்தி செயற்பாடுகள் நடைபெறும் போதும் தற்போதைய ஆலய நிர்வாகச் செயலாளர் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு ஆறு பேர்ச் அளவு காணிதான் உரிமையுள்ளது எனக் கூறியிருந்தார். எனவே, நாங்கள் எவ்வாறு ஆலய அபிவிருத்தியை மேற் கொள்வதெனவும் அவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

ஆனால், தற்சமயம் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு அண்மையில் அனுமதியற்றுக் கட்டப்பட்டுள்ள வியாபார நிலையங்களின் விவகாரம் தொடர்பாக நாம் ஆராய்ந்தபோதுதான் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குப் பதினெட்டு ஏக்கர் ஒரு ரூட் இருபது பேர்ச் காணி காணப்படுவது தெரியவந்தது. இது பலரும் அறிந்திராத ஒரு விடயம். இவ்வாறு விஸ்தீரணமுள்ள காணி நிலப்பரப்புக்களைக் கொண்ட திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு அருகாமையில் ஒரு யாத்திரிகர் மடம் நிர்மாணிக்க முடியாத நிலையில்தான் நாங்களிருக்கிறோம். இது மிகவும் வருத்தத்திற்குரியது" என்றார்.

இதேவேளை, இதுவரை காலமும் யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த சிவபூமி அறக்கட்டளையினரின் பணிகள் முதன்முறையாக கிழக்கிலங்கை வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரியது. எனினும், திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடம், சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை ஆகியவற்றின் வளர்ச்சியில் அனைத்துத் தரப்பினரதும் ஒன்றித்த கூட்டு முயற்சி அவசியம் என்பதை சைவப் பெருமக்கள் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

தொகுப்பு : செ.ரவிசாந்
ஊடகவியலாளர், குப்பிளான்

## உழைப்பால் உயர்ந்த பெருமகன்



அண்ணா நடராசா என்பது அனைவருக்கும் அறிமுகமான பெயராகும். இவர் இணுவில் கிராமத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் 19.10.1937 அன்று பொன்னையா சின்னம்மா தம்பதிகளின் மகனாகப் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், உயர் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றவர். அண்ணா தொழிலகத்தை நடத்தி வந்ததன் மூலம் பிரபல தொழிலதிபராக விளங்கியவர். சமய சமூகப் பணிகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தவர்.

"முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்" என்ற முதுமொழிக்கிணங்க இவரது பணி தொடர்ந்தது. 1970 ஆண்டு அண்ணா தொழிலகம் விரிவாக்கம் செய்யப் பெற்றது. மேலும் பல நூற்றுக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டது. அயராத உழைப்பு, விடாமுயற்சி என்பன ஊடாக சாதனை படைத்த தொழிலதிபர் அண்ணா பொ.நடராசா அவர்கள் 2015.07.05ஆம் திகதி காலமானார்.

# சிவபூமி திருவாசக அரண்மனை திறப்புவிழா,
# சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா (2018)





















## நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவிலின் மண்டலாபிஷேகப் பூர்த்தி நிகழ்வு (18.07.2018)







தென்னிந்தியா சிரவை ஆதீன குருமுதல்வர் திருவாசக அரண்மனைக்கு வருகை (ஜீலை 2018)



இந்தியாவிலிருந்து வருகை தந்த சிந்துஜா அவர்களின் சங்கீத கதாப்பிரசங்க நிகழ்ச்சி (நவம்பர் 2018)

குருபகவான் பெயர்ச்சியையொட்டி நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலில் இடம்பெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகள் (செப்ரெம்பர் 2018)





## இந்தியாவிலிருந்து வருகைதந்த ஓசூர் திருநெறிய அடியார் கூட்டத்தினர் நாவற்குழி திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதலை நிகழ்த்தினர் (டிசெம்பர் 2018)







## சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்தில்



குடிநீர் விநியோக இயந்திரம்




திருவாசக அரண்மனை திறப்புவிழாவில் கலந்துகொள்ள வருகை தந்திருந்த தமிழ்நாடு குமாரரவயலூர் திருமுறைக் கலாநிதி திருஞான.பாலச்சந்திரன் ஓதுவார் அவர்கள்





## நாவற்குழி திருவாசக அரண்மனை - திருவாசக விழாவில் (12.07.2019)

## யாழ். வருகைதரும் இவர்கள்



தமிழ்நாடு திருமுருகன்பூண்டி
திருமுருகநாதசுவாமி திருமடம் முதல்வர்
தவத்திரு சுந்தரதாச அடிகளார் சிறப்புரை.



தமிழ்நாடு திருமுறைக்கலாநிதி
திருத்தணி என்.சுவாமிநாதன் அவர்கள்
திருவாசக கச்சேரி.




அவுஸ்திரேலியா சிட்னி
இதய வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி
வ.மனோமோகன் அவர்கள் வாழ்த்துரை.




தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த
தவத்திரு அரிகர தேசிக சுவாமிகளின் திருமுறை
இன்னிசை சொற்பொழிவு (செப்ரெம்பர் 2018)



## இறையடி சேர்ந்த, சிவபூமி அறக்கட்டளை வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர்களை நன்றியுடன் வணங்குகிறோம்!



**அமரர் க.சிவாஜி அவர்கள்**
**உப தலைவர்**
**சிவபூமி அறக்கட்டளை**





**அமரர் கிட்ணர் பாலச்சந்திரன் அவர்கள்**
**அமெரிக்கா**
**சிவபூமி முதியோர் இல்லம் ஸ்தாபிப்பதற்கு**
**பேருதவிபுரிந்த பரோபகாரி**

# நல்லூர் பெருந்திருவிழாவுக்கு நாங்கள் ஆயத்தமாவோம்!

கலாநிதி ஆறு.திருமுருகன்

சைவத் தமிழர்களின் வரலாற்று திருக்கோவிலாகிய நல்லூர்க் கந்தன் பெருந்திருவிழா இம்மாதம் 6ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகின்றது. யாழ்.குடாநாடே நல்லூரான் திருவிழாவுக்காக புனிதம் பேணும் காலம் நெருங்கிவிட்டது. தமிழ் வேந்தர்கள் இராஜதானியாக ஆட்சிசெய்த நல்லூர்ப் பதிக்கு தனித்துவம் உண்டு. நல்லூர்த் திருவிழா எப்போது வருமென அனைவரும் காத்திருக்கும் அற்புத திருநாள் அண்மித்து வந்துவிட்டது.

நல்லைக் கந்தன் வீதியெங்கும் சேவற்கொடிகள் பறக்கத் தொடங்கிவிட்டன. விடிவுதரும் வேலவனின் செய்தி கூறும் சேவற்கொடிகள் "வாருங்கள்! வாருங்கள்!" என்று அழைக்கிறது. எல்லாத்திசையும் தாகசாந்தி நிலையங்கள், அன்னதான மடங்கள் ஆயத்தமாகிவிட்டன. நல்லூர்க் கந்தனின் காளாஞ்சி வழக்கம்போல் மாட்டுவண்டியில் கொண்டுசென்று கொடிச்சீலை வழங்கும் உபயகாரரிடம் கையளித்து விட்டார்கள். யாழ்ப்பாண மாநகரசபை இரவு பகல் நல்லூரைப் புனிதப்படுத்த தயாராகி விட்டது. நல்லூரான் திருக்கோயில் உள்ளும் புறமும் வர்ணங்கள் தீட்டப்பட்டு அடியார்கள் ஆனந்தம் கொள்ள, ஆரவாரமாக கோவில் பணியாளர்கள் தம் கடன் செய்கிறார்கள். நல்லூர் சுற்றாடல் சுறுசுறுப்பாகிவிட்டது. ஊர்தோறும் நல்லூரான் விரதத்திற்காக வீடுகளை சுத்தம் செய்யத் தொடங்கி விட்டார்கள். இருபத்தைந்து நாட்களும் எல்லாம் மறந்த நலத்தைப் பெறுவதற்காக பக்தர்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

நல்லூரான் கொடியேறிவிட்டால் அதிகாலை நான்கு மணிக்கு அரோகரா! அரோகரா! என்ற வார்த்தை ஓங்கி ஒலிக்கும். ஏராளமான இளைஞர்கள் அங்கப்பிரதட்சணம் செய்யும் அழகு சொல்லில் வடிக்கமுடியாது. அடியழித்துக் கும்பிடும் அன்புச் சகோதரிகள் அணியணியாக வரப்போகிறார்கள். 'கைதான் நெகிழவிடேன் ஐயனே உன்முகம் பார்க்க வேண்டும்' என முண்டியடித்து நெருங்கி வீழ்ந்து எழும் பக்தர்கள் ஆயத்தமாகி விடுவார்கள். அலங்காரக் கந்தன் எத்தனை விதமான அலங்காரங்களோடு காலையும் மாலையும் வீதிவலம் வருவான். குடையின் அழகில் இருந்து குருக்களின் உடையழகு வரை பேசாதவர்கள் இல்லை. அப்பப்பா! என்ன அலங்காரம்?

எப்படி இந்தக் கோயிலை யார் நடத்துகிறார்கள் என்று தெரியாமலே எஜமானர் வழிநடத்துகிறார். இது என்ன அதிசயம்? எங்கோ ஒரு மூலையில் நின்று தந்தையும் மைந்தனும் மணிக்கூடு ஓடுமுன் நல்லூர் நேரம் தவறாமல் காப்பதன் விந்தைதான் என்ன? இப்படி பல சம்பாஷணை செய்வார்கள். நல்லூரான் தேரை மினுக்கத் தொடங்கி விடுவார்கள் சில தொண்டர்கள். வானுயர்ந்த சப்பரத்தை ஓரிரு வாரங்களிலே கட்டத் தொடங்கி விடுவார்கள். வேதபாராயணமும், நாத அர்ப்பணமும், முருகா! முருகா! என்ற ஓயாத ஓசையும் இனி கேட்டுக்கொண்டே இருக்கலாம்.

நல்லூர் வீதியில் மண்ணில் விளையாடுவதற்கு மழலைகள் காத்திருப்பார்கள். குகை கட்டி ரசிப்பார்கள். பூனைக்கிடங்கு விளையாட்டு என்று மண்ணுக்குள் பாதை அமைத்து கூட்டமாக விளையாடி மகிழ்வார்கள். வாசல் தரையில் மணலைத்தடவி ஈரமண்ணில் இறைவடிவங்களை உருவாக்கி தமது வித்தைகளைக் காட்டுவார்கள். கிளறிய வீதியெல்லாம் கிடுகிடு என்று சரிசெய்து தண்ணீர் தெளித்து, விடிந்தால் மீண்டும் வீதி தயாராகிவிடும். மண்டபங்களில் நற்சிந்தனைகளும் பாட்டுக் கச்சேரிகளும் அரங்க நிகழ்ச்சிகள் பலவும் இனி ஆரவாரமாக இருக்கும். கலைஞர்கள் இடையே கர்வப்போட்டிகளும் தொடங்கும். காவடிகள், கரகாட்டங்கள், தீப்பந்த ஆட்டங்கள் என கண்களைப் பறிப்பதற்கு பல விடயங்கள் எங்களை நோக்கி வரும்.

இந்திரலோகம்போல் நல்லூரானின் திருவிழாக்காலம் மாற்றம் காணலாம். இந்த இனிய காட்சியைக் காணும் பேறுபெற்றவர்கள் பாக்கியசாலிகள். நல்லூரானின் மகோற்சவ கால இருபத்தைந்து நாட்களும் எமக்கு கிடைத்த தவப்பொழுது. எவ்வளவோ நேரங்களை அவப்பொழுதாக கழிப்பவர்கள் நாங்கள். இந்த இனிய தவப்பொழுதை குடும்பம் குடும்பமாக சந்திக்கத் தயாராகுவோம். சைவத் தமிழர்களே, நல்லூர்த் திருவிழா நமது பண்பாட்டின் திருவிழா. எங்கள் பாரம்பரியத்தின் பெருவிழா.

இத்திருநாட்களை இறைவன் தந்த வரப்பிரசாதமாகக் கொள்ளுங்கள். அலங்காரமாக வாருங்கள், அநாகரிகமாக வராதீர்கள். எங்கள் ஆடை கலாசாரத்தின் அர்த்தத்தை உணர்ந்து கோவில் வழிபாட்டிற்குரிய பண்பாட்டு உடைகளோடு ஆண்களும் பெண்களும் அவதானமாக வாருங்கள். வேடிக்கைகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். நவநாகரிக ஆடை அணிகலன்களை திருவிழாக் காலத்தில் நீங்களும் அணியாதீர்கள். உங்கள் உறவுகளையும் அணியவிடாதீர்கள். ஆலய வீதிகளில் அருள் வார்த்தைகளைப் பேசுங்கள்.

நல்லூரில் புதிய உறவுகள், நட்புக்கள் அறிமுகங்கள் அனைவருக்கும் கிடைப்பது வழக்கம். அடியார்கள் இறைபலத்தையும் உளப்பலத்தையும் ஒருங்கே பெறுகின்ற காலம். இந்த உத்தம காலத்தை யாரும் உதாசீனம் செய்யாதீர்கள். இளைஞர்களே! இனிதாக வாருங்கள். நல்லூரில் உங்கள் பக்தியைக் கண்டு நாம் பெருமை கொள்வோம். நீங்கள் இருக்க எங்களுக்கு என்ன பயம் என்று ஆறுதல் கொள்வோம். அந்த நம்பிக்கையில் காத்திருங்கள். நல்லூர் சுற்றாடலில் வாணிபம் செய்ய வருபவர்களே! வாருங்கள், வாடிக்கையாளர்களின் வாழ்வுக்கு உகந்த பொருட்களை வண்ணமுறக் கையளியுங்கள். வாணிபத்திற்காக நல்லூரான் சுற்றாடலின் புனிதத்தை பேணத் தவறாதீர்கள். நல்லூர் சூழலுக்கு அப்பாலுள்ள மதுபானசாலைகளும், மாமிச உணவகங்களும் மௌனித்தல் அவசியமாகும்.

கருணைத் தெய்வமே! நல்லைக் கந்தா! உன்னை வணங்குவதற்கும் உன் வடிவழகை கண்ணாரக் காண்பதற்கும் ஓடோடி வரப்போகிறோம். பாதுகாப்பின் பேரால் நாங்கள் பயமுறாமல் அச்சம் தவிர்த்து ஆனந்தமாய் உன்னைக் காண வீதிகள் அகலத் திறக்கட்டும். பக்தர்கள் வில்லங்கம் இல்லாமல் உன்னைக் காண வருவதற்கு வேலவனே நீ வழிசெய்ய வேண்டும். ஊடகங்களே! ஊரெல்லாம் திரண்டு நல்லூரான் காற்றை சுவாசிக்க நல்ல செய்திகளைப் பரப்புங்கள். நல்லதே நடக்கட்டும்! நல்லூரான் தஞ்சம்!

# நல்லைக் கந்தன் ஆலயத்தின் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு கடந்த மாதம் (ஜூலை) 27ஆம் திகதியன்று இடம்பெற்றது. வழமையான பாரம்பரிய முறைப்படி திருவிழா அழைப்புப் பத்திரிகையும், காளாஞ்சியும் ஒற்றைத் திருக்கை மாட்டு வண்டில் மூலம் நல்லைக் கந்தன் ஆலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, கல்லியங்காட்டிலுள்ள கொடிச்சீலை வடிவமைப் பாளர்களிடம் கையளிக்கப்பட்டது. ஆலய சிவாச்சாரியார்களும் தொண்டர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வேலால் வினை முடிப்பாய்

**பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்**

நல்லைப்பதி வாழும் ஞானத் தமிழ்த் தலைவா
தில்லைக்கிறை தந்த செல்வா! எம் சிந்தையெல்லாம்
அல்லல்படுவ தறிந்திலையோ! அப்பா நீ
எல்லையில்லாக் கருணை மழை பொழிந்தருள்க!



ஈனர் கொடுஞ் செயலை இல்லையெனச் செய்த
ஞானத் தனிச் சுடரே! நல்லூரா! நீ
மோனத் தவச் செல்வர் செல்லப்பர், யோகர் எனும்
காணற்கரிய பிறவிகளின் கடவுளப்பா!

ஞாலமெலாம் நினைந்துருகி நாளும் உன் திருவடியை
நீள நினைக்கும் நிலை வேண்டும்! நல்லூரா!
கோலக் குறத்தி மணவாளா! கொள்கையினாய்!
காலமெலாம் எம்மினத்தைக் கார்!

பட்டத்துயர் விட்டொழியப் பார்க்கும் பராபரனே!
இட்டமுடன் தேரேறி எழுந்தருளும் ஆறுமுகா! உன்
கட்டளைக்காய் எப்பொழுதும் காத்திருக்கும் மெய்யடியார்
முட்டறுக்க முன்வருவாய் முந்தி!

நைந்துருகும் மெய்யடியார் நாளும் உன் திருச்செவியில்
சந்தமுடன் ஓதும் தமிழ் கேட்டு மகிழ்ந்தவனே! முன்பு
வந்த இடரும் இனிவருமிடரும் உணர்வோனே!
முந்தி வந்து வேலால் வினைமுடிப்பாய் இக்கணமே!

## நல்லைக் கந்தனது வேல் சிறப்பு

தமிழரது முருகபக்தி ஒன்றுதான். அஞ்சுதலை நீக்கி அஞ்சாமை என்னும் அருங்குணத்தைத் தருவது என்று திடமாயுரைக்கிறார் சிவயோக சுவாமிகள். தமிழரது அஞ்சுதலை நீக்கி ஆறுதலைத் தருவது நல்லைக் கந்தனது வேலே என்பதுதான் முடிந்த முடிவு. 'யாமிருக்கப் பயமேன்' என்பதுதான் உட்பொருள். சிவயோக சுவாமிகள் அருளிய வரிகள் இவை.

"பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி" என்பது பாடல்.

நல்லூர் கந்தனின் விழாவென்றால் யாழ்ப்பாணம் மிகப் புனிதமாகிவிடும். காலாதிகாலமாக நம்பிக்கையில் உண்டான முருக பக்தி நல்லூரின் விழாக்களின்போது உன்னதமாகி உணர்வுபூர்வமாகவே அலைபாய்கிறது. நல்லைக் கந்தன் மகோற்சவ விழா யாழ்ப்பாணச் சமூகத்தின் பெரும் விழாவாக சிறப்புப் பெறுகிறது.

**நல்லூரில் வீற்றிருக்கு நாடவொனா னறுமுகவன்**
**பல்லோருங் கண்கண்டே பணிந்துமிக வின்பமுற**
**எல்லாருந் தேர்மிசையே யேறிவருங் காட்சிசொல**
**வல்லாரு மிங்குண்டோ வானோர்க்கு மரிதேயாம்.**

## பாரம்பரிய நடைமுறைகளைப் பேணிவரும் நல்லூர் கந்தசுவாமி கோவில்

நவீன தொழில்நுட்ப வசதிகள் அறிமுகமாகிவரும் இன்றைய காலகட்டத்திலும் நல்லைக் கந்தன் ஆலயம் பாரம்பரிய வழக்கத்தையும், அதனோடு இணைந்த செயற்பாடுகளையும் பேணி வருவதை சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாவதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் மகோற்சவப் பத்திரிகை (திருவிழா முன்னறிவித்தல்) அடங்கிய காளாஞ்சி கையளிக்கும் வைபவம் இடம்பெறுவது வழக்கமாகும். வருடந்தோறும் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை வழங்கி வருபவர்களுக்கு ஆலய சிவாச்சாரியார்களும், தொண்டர்களும் மாட்டு வண்டியில் சென்று காளாஞ்சி வழங்கப்படுகிறது, வாகனப் போக்குவரத்து குறைந்திருந்த ஒரு காலகட்டத்தில் மக்கள் மாட்டு வண்டியை பயன்படுத்தி வந்த நிலையில், ஆலய நிர்வாகமும் மேற்கொண்டுவந்த அன்றைய வழக்கத்தை நினைவுபடுத்தும் வகையில், இப்போதும் அந்த நடைமுறை பின்பற்றப்படுவதை இங்கு குறிப்பிடவேண்டும். இவ்வருட மகோற்சவத்திற்குரிய காளாஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் (ஜூலை) 27ஆம் திகதியன்று இடம்பெற்றது.

நல்லைக் கந்தன் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழாவுக்கு கொடிச்சீலை வழங்கும் சம்பிரதாய நிகழ்வும் நீண்டகாலப் பாரம்பரியமான நடைமுறையாகும். நல்லூர் பிரதேசத்தில் வாழ்ந்துவரும் செங்குந்த மரபினர் அன்று முதல் இன்று வரை கொடிச்சீலை வழங்கி வருகிறார்கள். இதனை சாதாரணமாக கையளிப்பதில்லை. கொடியேற்ற தினத்திற்கு முதல்நாள் அலங்கரிக்கப்பட்ட சிறு இரதம் ஒன்றில் கொடிச்சீலை வைக்கப்பட்டு, அதனை ஊர்வலமாக எடுத்து வந்து ஆலயத்தில் வைத்து பிரதம குருக்களிடம் சம்பிரதாய பூர்வமாக கையளிக்கப்படுவது வழக்கமாகும்.

இன்று, நாட்டிலுள்ள ஒவ்வொரு இந்து ஆலயங்களிலும் அர்ச்சனைக்கு வெவ்வேறு விதமான கட்டணங்கள் அறவிடப்பட்டுவருவதை அவதானிக்க முடிகிறது. ஆனால் அன்று முதல் இன்றுவரை நல்லைக் கந்தன் ஆலயத்தில் அர்ச்சனைக் கட்டணம் ஒரு ரூபாய் மட்டுமே.

இங்கு நேர முகாமைத்துவம் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வருகிறது. தினந்தோறும் குறிக்கப்பட்ட நேரத்திற்கு தவறாது பூசைக் கருமங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. வருடாந்த மகோற்சவத்தின் போதும் நேர முகாமைத்துவம் சிறப்பாகப் பேணப்படுகிறது. பிரமுகர்கள் அல்லது உபயகாரர்களது வருகையை எதிர்பார்த்து பூசை, அபிஷேகம், உற்சவக் கிரியைகள் என்பன காலதாமதம் செய்யப்படுவது இங்கு முற்றாகக் கிடையாது. அனைத்தும் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு ஆரம்பமாகி திட்டமிடப்பட்ட நேரத்திற்கு நிறைவுபெறுவது வழக்கமாகும்.

## இளங் கலைஞர் மன்றத்தின் தெய்வீக இசையரங்கு

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர்க் கந்தன் மகோற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் வழங்கும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சி வழமைபோல நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. நல்லூர்க் கந்தன் கொடியேற்ற தினமான இம்மாதம் 6ஆம் திகதி தொடக்கம் வைரவர் உற்சவ தினமான 01.09.2019 வரை தினமும் மாலை 6.45மணி முதல் இரவு 8.15 மணி வரை மேற்படி தெய்வீக இசையரங்கு இடம்பெறும்.

மங்கள இசை, வாய்ப்பாட்டு, திருமுறை அரங்கு, வயலின் இசை, வீணை இசை, நாட்டிய அஞ்சலி, நடன நிகழ்வு, இசை நாடகம் என பல்வேறு அம்சங்கள் தெய்வீக இசையரங்கை அலங்கரிக்கவிருக்கின்றன. இறுதிநாளான செப்ரெம்பர் முதலாம் திகதி யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் தயாரித்து வழங்கும் 'பக்த நந்தனார்' இசை நாடகம் இடம்பெறும்.

## நல்லூரில் கந்தபுராண எழுச்சி அறநெறி விழா

நல்லூர்க் கந்தன் மகோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வழமைபோல இவ்வருடமும் கந்தபுராண எழுச்சி அறநெறி விழாவை நடத்துகிறது. நல்லை ஆதீன கலாமண்டபத்தில் இம்மாதம் 6ஆம் திகதி முதல் தினமும் மாலை 6.30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நடைபெறும். அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள், கலைஞர்களது இசை நிகழ்ச்சிகள் மற்றும் சிறப்புச் சொற்பொழிவு என்பன சிறப்பு அம்சங்களாக இடம்பெறுகின்றன.

தினமும் இடம்பெறுகின்ற சிறப்புச் சொற்பொழிவின்போது, மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கொத்து வழங்கப்பட்டு, சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்கு பரிசில்கள் வழங்கப்படும் செயற்றிட்டத்தையும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடைமுறைப்படுத்துகிறது.

# வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூர் பிரதேசம்

யாழ். மாவட்டத்திலுள்ள நல்லூர் பிரதேசம் பலவகையிலும் சிறப்புப் பெற்றது. தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தின் போது நல்லூர் இராசதானியாக விளங்கிய பெருமைக்குரியது. தமிழ் மன்னர்களது ஆட்சிக்காலத்து நினைவுகளையும் கதைகளையும் சொல்லும் ஒருசில கட்டடங்களும், கட்டட எச்சங்களும் தொல்பொருள் மரபுரிமை சின்னங்களாக நல்லூர் பிரதேசத்தில் இப்போதும் காணப்படுவது வரலாற்றுச் சிறப்பாகவே அமைந்துள்ளன. இவற்றுள் மந்திரி மனை, சங்கிலியன் தோப்பு நுழைவாயில் மற்றும் சங்கிலியன் அரண்மனை கட்டட அத்திபாரம், யமுனாரி போன்றவைகள் குறிப்பிடத்தக்கன.

ஐந்தாம் குரவர் எனப் போற்றப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சின்னத்தம்பிப் புலவர், சரவணமுத்துப் புலவர் போன்ற அறிஞர் பெருமக்கள் தோன்றிய பிரதேசமும் நல்லூர்தான். அறிஞர் பெருமக்கள் மட்டுமல்ல ஞான பரம்பரையொன்றை தோற்றுவித்த பெருமையும் நல்லூருக்கு உண்டு. யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரையில் முதல்வராகப் போற்றப்படும் கடையிற் சுவாமிகள் நடமாடிய புண்ணிய பூமியாக நல்லூர் விளங்குகின்றது. இவரது சீடரான செல்லப்பா சுவாமிகள் நல்லூர் தேரடியில் வாழ்ந்தவர். அவரது ஞான உபதேசம் பெற்று சீடரான யோகர் சுவாமிகள் நல்லைக் கந்தன் ஆலய புண்ணிய பூமியில் நடமாடியவர். தன் ஞானகுருவை மட்டுமல்ல நல்லைக் கந்தனையும் போற்றிப் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். பின்னாளில் வாழ்ந்த குடைச் சுவாமிகளும் நல்லைக் கந்தனின் புனித பூமியில் கால்களை பதித்தவர். இத்தகைய ஞான பரம்பரையினரின் பாதச் சுவடுகளைப் பெற்ற பெருமைக்குரியது நல்லூர்.

நல்லூரில் நாவலர் மணிமண்டபமும், அங்குள்ள நாவலர் சிலையும், நாவலர் கலாசார மண்டபமும் நாவலர் பெருமானின் நினைவை மீட்டிக் கொண்டிருக்கும் சின்னங்களாக முக்கியத்துவம் பெறுகின்றன. இன்னொரு நினைவுச் சின்னமான - அரியாலையிலிருந்து நல்லூர் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் நாவலர் வீதி, யாழ். குடா நாட்டின் மிக நீண்ட தூர வீதியாக பிரபலம் பெறுகிறது.

இலங்கையின் ஒரேயொரு சைவ ஆதீனமாக பெருமை பெறும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நல்லூரிலேயே அமைந்திருப்பதும் சிறப்புக்குரியது. நல்லைக் கந்தன் ஆலயத்திற்குப் பின்னால், ஆலய மேற்கு வீதியில் ஆதீனத்தின் எழில்மிகு கட்டடம் காட்சி தருகிறது. இலங்கையிலுள்ள பெரும் இந்துமத அமைப்புகளுள் ஒன்றான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ் பிராந்திய பணிமனை, இலங்கை சின்மயா மிஷனின் வடபிரதேச கிளை நிலையம், திவ்ய ஜீவன சங்கம், துர்க்காதேவி மணி மண்டபம், கம்பன் கோட்டம் போன்ற சமய மற்றும் கலை, கலாசார நிறுவனங்கள் பல நல்லூர் பிரதேசத்திலிருந்தே சேவை ஆற்றிக்கொண்டு இருக்கின்றன. பாரத நாட்டின் இலங்கைக்கான யாழ்.துணைத் தூதரகமும் நல்லூரிலேயே இயங்கிக் கொண்டிருப்பதும் இன்னொரு சிறப்புக்குரியது.

கடந்த போர்க்கால நிலைமைகளுக்குப்பின் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், தனது தலைமைப் பணிமனையையும், ஏனைய உப செயலகங்களையும் நல்லூர் பிரதேசத்தில் அமைத்திருப்பதையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். இந்த செயற்பாடானது, தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தின்போது நல்லூர் பிரதேசம் இராசதானியாக விளங்கியிருப்பதை மீளவும் நினைவுபடுத்தும் வகையில் இருப்பதாகவே சொல்லத் தோன்றுகிறது.

யாழ். குடாநாட்டில் சிறியது, பெரியது என பெருமளவு இந்துக் கோவில்களைக் கொண்ட பிரதேசமாக நல்லூர் விளங்குகிறது. இங்குள்ள. கோவில்கள் பல பழந்தமிழ் மன்னர்களது ஆட்சியுடன் தொடர்புபட்டதான வரலாற்றுப் பெருமைக்குரியது என ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. நல்லைக் கந்தன் ஆலயம், இதற்குக் கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோவில், தெற்கில் கைலாசநாதர் கோவில், மேற்கே வீரமாகாளி அம்மன் கோவில், வடக்கில் சட்டநாதர் கோவில் என்பனவற்றை காவல் அரண்களாக்கி அரச ஆட்சிப் பரிபாலனம் மேற்கொள்ளப்பட்டதாக வரலாறு சொல்கிறது. போர்க்காலத்தின்போது அரசர்கள் இந்த ஆலயங்களில் தங்கள் ஆயுதங்களை வைத்து வழிபாடாற்றி, போருக்குச்சென்றிருப்பதாக வரலாற்றுப் பதிவுகளிலிருந்து அறியமுடிகிறது. நல்லைக் கந்தன் ஆலயத்திற்குப் பின்னால் அமைந்துள்ள நல்லூர் சிவன் கோவிலும் இன்னொரு வகையில் சிறப்புப் பெறுகிறது.

இந்த வகையில் நல்லூர் பிரதேசத்தில் பல ஆலயங்கள் இருந்தாலும், நல்லூரான் என்று போற்றித் துதிக்கப்படும் ஒரு தனித்துவச் சிறப்பு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வேலவனாக எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுக்கே உண்டு. நாட்டிலுள்ள ஏனைய சகல ஆலயங்களையும் குறிப்பிடும்போது ஊருடன் ஆலயத்தின் பெயரையும் இணைத்துச் சொன்னால்தான் அனைவருக்கும் புரியும். ஆனால் நல்லூரான் என்று சொன்னால், அதற்கு விளக்கம் தேவையில்லை. நல்லூரின் பெருமை மேலோங்குவதற்கு இதுவும் காரணமாகும்.

– அ.கனகசூரியர்



# நல்லைக் கந்தன்மீது யோகர் சுவாமிகள் பாடிய கிளிக்கண்ணி

சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களுள் ஒன்று கிளிக்கண்ணி. சுவாமிகள் நல்லூர் முருகன் மீது பாடிய பாடல்களுள் ஒன்றாகவும் இது சிறப்புப் பெறுகின்றது.

கிளிக்கண்ணியில் சிவயோக சுவாமிகள் கற்பனையிலே ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு நல்லூர் கோவிலை வழிபடச் செல்கிறார். அங்கு காணும் சிறப்புக்களை ஒவ்வொன்றாகச் சொல்கிறார். இறுதியில் தீர்த்தம், திருநீறு, சந்தனம் ஆகியவற்றைக் கற்பனைப் பெண்ணை வாங்கும்படி செய்து மிகக் கவனமாக வீட்டுக்கு அனுப்பி வைக்கின்றார். நல்லூர் கோவில் வழிபாடுகளை ஒருபோதும் பார்த்தறியாதவர்கள் சுவாமிகளுடைய கிளிக்கண்ணி மூலம் பார்த்துப் பயன் அடையும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன.

ஆன்மா ஒருபோதும் - கிளியே
அழியாதது நாங்கள்
வீண்பாவம் விட்டிடடி - கிளியே
விளாங்குநல்லூர் தெரியுதடி (1)

காண்பானும் காட்சியும் போய்க் - கிளியே
கண்டபல பொருளும்விட்டு
மாண்பாகச் சிந்தையிலே - கிளியே
வடிவேலைப் போற்றிடடி (2)

ஊண்பொருளும் ஒழியுமடி - கிளியே
உலகமெல்லாம் அழியுமடி
சேண்பொலியுந் திருவடியைக் - கிளியே
சிந்தையிலே போற்றிடடி (3)

சங்கோசை கேட்குதடி - கிளியே
தாளமேள முழங்குதடி
எங்கெங்கும் வெளிச்சமடி - கிளியே
எந்திழாய் நடந்துவாடி (4)

சண்பக மரத்தடியிற் - கிளியே
சாதுக்களின் கூட்டமடி
மண்போட்டால் மண்விழாதே - கிளியே
மனிதரெல்லாங் கூடிக்கொண்டார். (5)

மாறிப் பொறிவழிபோய்க் - கிளியே
மாறாட்டம் கொள்ளாதே
ஆறி நடந்துவாடி - கிளியே
அதிசயங்கள் மெத்தவடி (6)

தேர்முட்டிப் படிமேலே - கிளியே
செல்லப்ப னென்றசீமான்
ஆர்வமுடன் இருக்கிறான்டி - கிளியே
அங்குபோவோம் வந்திடடி (7)

கிட்ட நெருங்கையிலே - கிளியே
கிடுகிடென்று நடுங்குதடி
முட்டாளைப் போலேயவன் - கிளியே
முகமும் விளங்குதடி (8)

பித்தனெனப் பலபேரும் - கிளியே
பேசிப்பேசி இகழ்வார்கள்
எத்தினாலும் அவன்மனமோ - கிளியே
எள்ளளவுங் கலங்காதே (9)

பத்தியுடன் வந்திடடி - கிளியே
பார்த்தவுடன் அஞ்சாதே
வித்தகஞ்சேர் திருவடியில் - கிளியே
விழுந்துநீ கும்பிடடி (10)

நாமறியோ மென்றுசொல்லிக் - கிளியே
நகைசெய்வான் நாணாதே
தாமதம் பண்ணாதே - கிளியே
சடுதியாய்க் கும்பிடடி (11)

கோணாத சிந்தையுடன் - கிளியே
கும்பிட்டு நின்றிடடி
வீணான ஆசையெல்லாம் - கிளியே
விட்டோடும் வெற்றியடி (12)

ஆரறிவா ரென்றுசொல்லிக் - கிளியே
அதட்டுவான் அஞ்சாதே
பாரறிந்த பித்தனடி - கிளியே
பட்சமுடன் பணிந்து நட (13)

கண்டார் நகைப்பரெனக் - கிளியே
கண்மணி நீ அஞ்சாதே
பண்டார வேடமடி - கிளியே
பாடிப் பணிந்திடடி (14)

ஒண்டொடியே வந்திடடி - கிளியே
உள்வீதிக்கும் போவமடி
வண்டி வண்டி யாயினநீர் - கிளியே
வந்து குவியுதடி (15)

வகைவகையாய்ப் பச்சரிசி - கிளியே
வாழைக்குலை தேங்காய்கள்
உவகையுடன் கொண்டுவந்து - கிளியே
உதவுகிறார் பார்த்திடடி (16)

கர்ப்பூரப் பெட்டிகளும் - கிளியே
கட்டுக்கட்டாய்க் கரும்புகளும்
பொற்பூவும் சந்தனமும் - கிளியே
பொலியுதடி வீதியெல்லாம். (17)

கண்டாயோ கார்மயிலே - கிளியே
கந்தன்விளை யாட்டுக்களை
மண்டலங்கள் நடுங்குமடி - கிளியே
மணியோசை கேட்குதடி (18)

பந்தி பந்தி யாயிருந்து - கிளியே
பார்ப்பார்க ளெல்லாரும்
விந்தைசேர் மந்திரத்தைக் - கிளியே
விளம்புகின்றார் கேட்டிடடி (19)

பச்சைப் பசுங்கிளியே - கிளியே
பார்த்தாயோ கதவுகளை
அச்சமின்றி மூடிவிட்டார் - கிளியே
அபிடேகம் ஆகுதடி (20)

ஏக மனதாகிக் - கிளியே
எல்லாரும் நிற்கையிலே
வேகமுடன் கதவுகளைக் - கிளியே
வேதியர்கள் திறந்துவிட்டார் (21)

அஞ்சடுக்குத் தீபமுதல் - கிளியே
அடுக்கடுக்காய் தீபமெல்லாம்
அந்தணர்கள் காட்டுகிறார் - கிளியே
அன்புடனே கும்பிடடி (22)

அங்கையிலே பூவெடுத்துக் - கிளியே
அந்தணர்கள் ஆசீர்வாதம்
சங்கையின்றிச் சொல்லுகிறார் - கிளியே
சண்முகனை வேண்டிடடி (23)


திருநீறுஞ் சந்தனமும் - கிளியே
தீர்த்தம்பரி மாறுகிறார்
செங்கமல மடமாதே - கிளியே
சேவித்து நீ வேண்டியணி (24)

அத்தசாமப் பூசைக்குநாம் - கிளியே
ஆரணங்கே நிற்பமென்றால்
மெத்தநேர மாகுமடி - கிளியே
வீட்டிலேயா ளில்லையடி (25)

விரைவாய் நடந்துவாடி - கிளியே
வீணர்தங் கூட்டமடி
மாரிக்கால மானதனால் - கிளியே
மாகவன மாய்நடடி (26)

ஓடாதே வழுக்குமடி- கிளியே
உரைத் திடடி ஐந்தெழுத்தை
வாடாதே வீட்டுவாசல் - கிளியே
வந்தோமே திறந்திடடி! (27)

## பெருமைமிக்க நாவலர் பெருமான்



சைவ சேனாதிபதியாக, சைவத்தின் காவலராக விளங்கிய ஆறுமுக நாவலர் பெருமானுக்கு நல்லூர் முருகனே குல தெய்வம். இக்கோயிலின் தென்கிழக்குப் பகுதியில் நாவலர் பெருமான் சைவமடம் ஒன்றை ஸ்தாபித்தார். தமிழ்நாட்டின் திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து ஓதுவார் மூர்த்திகளை வரவழைத்து இந்த மடத்திலே தங்க வைத்து மகோற்சவ காலங்களில் சுவாமிக்குப் பின்னால் தெய்வத் தமிழாகிய திருமுறைகளைப் படிக்கும் மரபை ஏற்படுத்தி வைத்தார். திருநீறு கண்டிகை தரித்த சிவக்கோலத்துடன் தானும் ஒருவராகத் திருமுறைப் பஜனையில் கலந்து கொண்டார். இதனைக் கண்ட சிவாச்சாரியார்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வேத மந்திர கோசங்களை உச்சரித்தவாறு சுவாமிக்கு முன்னாலே சென்றார்கள். முன்னாலே வேதமந்திர கோஷம் ஒலிக்கப் பின்னாலே தமிழ் வேதமாகிய திருமுறைப் பாடல் ஒலிக்க முருகப்பெருமான் பவனி வந்த காட்சி அற்புதமாக இருந்தது என நாவலர் சரித்திரம் எழுதிய கனகரத்தின உபாத்தியாயர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நாவலர் காலத்திற்கு முன்பே யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆலயங்களில் நடைபெற்று வந்த புராணபடன மரபினை நாவலர் ஊக்குவித்தார். நல்லைக் கந்தன் ஆலயத்திலே நடைபெற்ற கந்தபுராணபடன நிகழ்விலே நாவலரின் மருமகன் வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை பாடல்களைப் படிக்க நாவலர் பெருமான் பயன் சொல்லியிருக்கிறார். இப்புராண படனத்தினைக் கேட்பதற்காகப் பல நூற்றுக்கணக்கான மக்கள் ஆலய மண்டபத்திலே கூடுவார்கள் என நாவலரின் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

நாவலர் பெருமான் ஆத்மார்த்த பூசையாகிய சிவபூசையை நியமம் தவறாது நாள்தோறும் செய்யும் வழமை உடையவர். சிவபூசை நிறைவுற்றதும் தெய்வத் தமிழ் பாடல்களைப் பாடியவண்ணம் தனது இல்லத்தில் இருந்து கால்நடையாகச் சென்று நாள்தோறும் நல்லூர் முருகனை வழிபட்டு வந்தார். 1969ஆம் ஆண்டு ஈழத்தில் வாழ்ந்த சைவப் பெருமக்கள் பலரின் கூட்டு முயற்சியினால் நாவலரால் ஸ்தாபிக்கப்பெற்ற சைவமடம் அமைந்திருந்த இடத்தில் நாவலர் மணிமண்டபம் அமைக்கப்பட்டு அவரின் திரு உருவச்சிலை வைக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு அச்சிலை அங்கிருந்து சிலரால் அகற்றப்பட்டது. இதனால் சைவத் தமிழ் மக்கள் பலரும் மனம் நொந்துபோய் இருந்தார்கள். நன்றி மறந்த சமுதாயமாக சைவத் தமிழ்ச் சமூகம் மாறிவிட்டதே என வெதும்பினார்கள். பண்டிதர் வித்துவான் கலாநிதி மு.கந்தையா அவர்கள் 'நாவலர் குரல்' என்ற பத்திரிகையை நடாத்தி, நடைபெற்ற அதர்மச்செயலை அம்பலப்படுத்தினார். ஆனால் நல்லைக் கந்தனின் திருவருள் பலபேருக்கு உள்ளே நின்று செயற்பட்டதால் மீண்டும் கந்தவேல் பெருமானின் மகோற்சவ தினத்தில் கார்த்திகை விரத நன்னாளில் சிலை, முன்பு இருந்த மண்டபத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்டதால் நாவலர் பாரம்பரியத்தை இந்த மண்ணிலே நிலை நிறுத்த விரும்பும் சைவப் பெருமக்கள் அனைவரும் உளப் பூரிப்படைந்தார்கள்.

**– சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**



# வடபகுதிக்கான புகையிரத சேவைகள் அதிகரிப்பு

இம்மாதம் முதலாம் திகதி முதல் கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை காலமும் தினந்தோறும் இடம்பெற்று வந்த நான்கு சேவைகள், ஆறாக உயர்த்தப்பட்டுள்ளன. இது சம்பந்தமான விரிவான தகவல்களை யாழ் புகையிரத நிலைய பிரதம அதிபர் திரு.தி.பிரதீபன் சிவபூமிக்கு தெரிவித்தார்.

## யாழ் - கொழும்பு கோட்டை நேர அட்டவணை

தினமும் காலை 5.30 மணிக்கு காங்கேசன் துறையிலிருந்து புறப்படும் உத்தரதேவி கடுகதி புகையிரதம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்து, பின்னர் காலை 6.10 மணிக்கு கொழும்பு கோட்டையை நோக்கி புறப்படும். பகல் 1.15 மணிக்கு கோட்டையை சென்றடையும்.

இதனைத் தொடர்ந்து காலை 6.25மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்திலிருந்து (புதிய சேவையாக) புறப்படும் மற்றுமொரு புகையிரதம் மாலை 4.00மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும்.

இதன்பின் வழமையான யாழ்தேவி புகையிரதம் காலை 8.25 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து, அங்கிருந்து காலை 9.35 மணிக்கு பயணத்தை ஆரம்பித்து மாலை 6.35 மணிக்கு கொழும்பு கோட்டையையும், மாலை 6.58 மணிக்கு கல்கிசையையும் சென்றடையும்.

பின்னர் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி புகையிரதம் வழமைபோல பகல் 1.15 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து, பகல் 1.45மணிக்கு இங்கிருந்து புறப்பட்டு இரவு 8.00 மணிக்கு கொழும்பு கோட்டையையும், இரவு 8.31 மணிக்கு கல்கிசையையும் சென்றடையும்.

இதனைத் தொடர்ந்து (புதிய சேவையாக) மற்றுமொரு புகையிரதம் மாலை 5.40 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து, இங்கிருந்து மாலை 6.40 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 4.00 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும்.

இதன் பின்னர் வழமையான இரவு தபால் புகையிரதம் சற்று தாமதமாக அதாவது இரவு 7.45 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்தடைந்து, இங்கிருந்து இரவு 8.25 மணிக்கு புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 4.40மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும்.

## கொழும்பு கோட்டை - யாழ். நேர அட்டவணை

தினமும் காலை 5.10 மணிக்கு கல்கிசையிலிருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி புகையிரதம் காலை 5.45 மணிக்கு கொழும்பு கோட்டையையும், பகல் 11.51 மணிக்கு யாழ்ப்பாணத்தையும், நண்பகல் 12.17 மணிக்கு காங்கேசன்துறையையும் வந்தடையும்.

தொடர்ந்து யாழ்தேவி புகையிரதம் காலை 5.50 மணிக்கு கல்கிசையிலிருந்து புறப்பட்டு, காலை 6.30மணிக்கு கொழும்பு கோட்டையையும், பிற்பகல் 2.37மணிக்கு யாழ்ப்பாணத்தையும், பிற்பகல் 3.20 மணிக்கு காங்கேசன்துறையையும் வந்தடையும்.

இதன் பின்னர் காலை 8.50 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து (புதிய சேவையாக) புறப்படும் புகையிரதம் மாலை 6.31 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். (இது காங்கேசன்துறை செல்லமாட்டாது)

இதனைத் தொடர்ந்து வழமையான உத்தரதேவி கடுகதி புகையிரதம் பகல் 11.50 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்டு, மாலை 6.15 மணிக்கு யாழ்ப்பாணத்தையும், மாலை 6.42 மணிக்கு காங்கேசன்துறையையும் வந்தடையும்.

பின்னர் (புதிய சேவையாக) இரவு 7.15 மணிக்கு புறப்படும் மற்றுமொரு புகையிரதம் மறுநாள் அதிகாலை 4.20 மணிக்கு யாழ்ப்பாணத்தையும், 5.05 மணிக்கு காங்கேசன்துறையையும் வந்தடையும்.

இதன்பின் இரவு தபால் புகையிரதம் கொழும்பு கோட்டையிலிருந்து இரவு 9.00மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 5.04 மணிக்கு யாழ்ப்பாணத்தையும், 5.55 மணிக்கு காங்கேசன் துறையையும் வந்தடையும்.

வழமைபோல இடம்பெற்று வரும் வாராந்த புகையிரத சேவையும் தொடரும். அதாவது ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 6.20 மணிக்கு மாத்தறையிலிருந்து புறப்படும் புகையிரதம் காலை 9.40 மணிக்கு கொழும்பு கோட்டையையும், இரவு 7.00 மணிக்கு யாழ்ப்பாணத்தையும் வந்தடையும். இந்தப் புகையிரதம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.20மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மாலை 4.25மணிக்கு கொழும்பு கோட்டையையும், இரவு 7.20 மணிக்கு மாத்தறையையும் சென்றடையும்.

புதிய இரு சேவைகளும் பரீட்சார்த்த ரீதியாக ஆரம்பித்திருப்பதாகவும் இந்தவகையில் காலை 6.25 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் புகையிரதம் காலை 7.43 மணிக்கு கிளிநொச்சியையும், காலை 9.02 மணிக்கு வவுனியாவையும் சென்றடையும் என்றும், கொழும்பு கோட்டையிலிருந்து காலை 8.50 மணிக்கு புறப்படும் புகையிரதம் பிற்பகல் 3.25 மணிக்கு வவுனியாவையும், பிற்பகல் 4.56 மணிக்கு கிளிநொச்சியையும் வந்தடையும் என்றும், யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களுக்கு கடமைக்காக செல்பவர்கள் இதனால் பெரிதும் பயன் பெறுவர் என்றும் பிரதம அதிபர் திரு.தி.பிரதீபன் குறிப்பிட்டார்.

செய்தியின் பின்னணியில்

## விண்ணில் பாய்ந்தது சந்திரயான் – 2


இந்தியாவின் கனவு திட்டமான சந்திரயான் - 2 விண்கலம் கடந்த மாதம் (ஜூலை) 22 ஆம் திகதியன்று விண்ணில் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான 'இஸ்ரோ' வினால் இது செயற்படுத்தப்படுகின்றது. நிலவின் தென்துருவ பகுதியில் ஆராய்ச்சி செய்வதே சந்திரயான் - 2 விண்கலம் அனுப்பப்படுவதன் நோக்கமாகும்.

இந்தியா கடந்த 2008ஆம் ஆண்டு சந்திரயான்-2 விண்கலத்தை நிலவுக்கு அனுப்பி ஆராய்ச்சி மேற்கொண்டது இதன்போது அங்கு தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலதிக ஆராய்ச்சிகளுக்காக பதினொரு ஆண்டுகளுக்குப் பின்னர் சந்திரயான் - 2 இப்போது அனுப்பப்பட்டுள்ளது.

பூமியிலிருந்து சந்திரன் 3,84,000 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இவ்வளவு தூரம் பயணிப்பதற்கு சந்திரயான் - 2 விண்கலம் 48 நாட்கள் எடுத்துக் கொள்ளும். அதன்படி செப்ரெம்பர் முதல் வாரத்தில் விண்கலம் நிலவில் தரை இறங்கி ஆய்வு மேற்கொள்ளும் என இந்திய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதுவரை எந்த நாடும் ஆய்வு மேற்கொள்ளாத சந்திரனின் தென்துருவ பகுதிக்கு சந்திரயான் - 2 அனுப்பப்படுவதன் மூலம் இந்தியா புதிய சாதனை படைக்க இருக்கிறது.

சந்திரயான் - 2 என்பது மூன்று பகுதிகளைக் கொண்ட ஒரு விண்கல தொகுப்பு. இதில் நிலவை சுற்றிவரும் கலன் ஒன்றும், நிலவில் தரையிறங்கும் கலன் ஒன்றும், நிலவின் தரைப்பரப்பில் ஊர்ந்து சென்று ஆய்வுகள் செய்யும் உலாவி ஒன்றும் இருக்கும்.


சந்திரயான் - 2 விண்கலம் வெற்றிகரமாக விண்வெளிக்கு ஏவப்பட்டது தொடர்பாக இஸ்ரோ தலைவர் கே.சிவன் தகவல் தருகையில், "கடந்த ஒன்றரை ஆண்டுகள் சிறிதும் ஓய்வின்றி ஆய்வு வெற்றி பெறவேண்டும் என்பதற்காக இஸ்ரோ விஞ்ஞானிகள் அனைவரும் உழைத்தனர். அவர்களது பெருமுயற்சியினால்தான் இந்த சாதனை நடந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.



இந்த சந்திரயான் - 2 விண்கலத்தைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு சூரியனுக்கு விண்கலத்தை அனுப்பும் திட்டத்தை இஸ்ரோ செயற்படுத்தவிருக்கிறது என்ற தகவலும் இப்போது வெளியாகியுள்ளது. இந்த திட்டத்திற்கு 'ஆதித்யா - எல்1' என்ற பெயர் சூட்டப் பட்டுள்ளது. சூரியனை சுற்றியுள்ள ஒளிவட்டத்தை ஆய்வு செய்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். இது தொடர்பாக இஸ்ரோ தலைவர் கே.சிவன் இணையத்தள பேட்டியொன்றில் "பூமியிலிருந்து பதினைந்து லட்சம் கிலோ மீற்றர் தொலைவில் சூரியன் இருக்கிறது. பருவநிலை மாறுபாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒளிவட்டம் பற்றி ஆய்வு நடத்தப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சந்திரயான் - 2 வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்ட செயற்பாடுகளுக்கான திட்ட இயக்குநர்களாகவும், வடிவமைப்பாளர்களாகவும் கடமையாற்றியவர்கள் வனிதா முத்தையா, ரிது ஆகிய இரு பெண்மணிகளாவர். இவர்களுள் வனிதா முத்தையா, இஸ்ரோ தலைவர் கே.சிவன் ஆகிய இருவரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


## கனடாவில் யாழ். மாணவியின் சாதனை



யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த தமிழ் மாணவியான செல்வி சரண்யா ஜெயகாந்தன் கனடாவில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கனடா விக்ரோறியா பாடசாலையைச் சேர்ந்த இவர், ரொறன்ரோ கல்விச் சபையின் 2019ஆம் ஆண்டிற்கான பரீட்சைகள் அனைத்திலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற நான்கு மாணவர்களுள் ஒருவராக இடம்பிடித்துள்ளார். இவர் 99 சதவீதத்திற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் தீர்த்தோற்சவம்




மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவம் கடந்த (ஜூலை) 31ஆம் திகதியன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் மத்தியில் சிறப்பாக நடைபெற்றது.

## மாவைக் கந்தனுக்கு புதிய சித்திரத்தேர்

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு புதிதாக வடிவமைக்கப்பட்ட முக உத்தர சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா கடந்த மாதம் (ஜூலை) 28ஆம் திகதி நடைபெற்றது. முன்னைய தேரைவிட பெரிதாகவும், பல சித்திர வேலைப்பாடுகளையும் சிறப்பு அம்சங்களையும் உள்ளடக்கியதாகவும் 45அடி உயரம் கொண்டதாகவும் புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் கலசத்தின் நிறை 65கிலோகிராமாகும். யாழ்.உடுவிலம்பதி நிதர்சன் சிற்பாலயம் அதிபர் சிற்பகலாரத்தினம் கந்தசாமி இளங்கோவன் (கோபி ஆச்சாரியார்) அவர்களது தலைமையிலான சிற்பக்கலைஞர்களால் மேற்படி புதிய சித்திரத்தேர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற மாவைக் கந்தன் ஆலய இரதோற்சவத்தின்போது முருகப்பெருமான் புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து எழுந்தருளினார்.

## ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகள் குருபூசை



கந்தர்மடம் வேதாந்தமடம் திருமுதல்வராக விளங்கிய ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளது குருபூசை வைபவம் இம்மாதம் முதலாம் திகதியன்று சிறப்பாக நடைபெற்றது.

## அமரர் வி.தர்மலிங்கம் அவர்களுக்கு உருவச்சிலை

மானிப்பாய் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியின் முன்னாள் முகாமையாளருமான அமரர் வி.தர்மலிங்கம் அவர்களது உருவச்சிலையொன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி வளாகத்தில் இம்மாதம் 2ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உருவச்சிலையை திறந்து வைத்தார். பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.மாவை சேனாதிராஜா, திரு.த.சித்தார்த்தன், யாழ். மாநகரசபை முதல்வர் திரு.இம்மனுவல் ஆர்னல்ட் உட்பட பல அரசியல்வாதிகளும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் பிரதேச மற்றும் நகரசபை உறுப்பினர்கள் சமயப் பெரியார்கள், கல்விச் சமூகத்தினர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள் என பலரும் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் வடபகுதி மாணவர்கள்



ஜப்பான் புகோகா நகரில் கடந்த மாதம் (ஜூலை) இறுதியில் நடைபெற்ற ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் இலங்கையிலிருந்து எட்டு மாணவர்கள் கலந்து கொண்டனர். இவர்களுள் மூவர் வடபகுதியைச் சேர்ந்த தமிழ் மாணவர்களாவர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நவாஸ்கன் நதி, மகேந்திரன் திகலொழிபவன், வவுனியாவைச் சேர்ந்த ஹரித்திக்கண் சுஜா ஆகியோரே பெருமைக்குரிய மூன்று மாணவர்களுமாவர். இவர்கள் கடந்த ஆண்டு (2018) நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்தவர்கள். நீண்ட இடைவெளிகளுக்குப் பின் தமிழ் மாணவர்கள் ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இணுவில் இந்துக் கல்லூரி முத்தமிழ் விழா

இணுவில் இந்துக் கல்லூரியின் முத்தமிழ் விழா இம்மாதம் முதலாம் திகதியன்று காலையும், மாலையும் இரு அமர்வுகளாக நடைபெற்றது.

காலை அமர்வு ஆசிரியர் திரு.தி.சசீதரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு..சு.சுந்தரசிவம் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை விரிவுரையாளர் திரு.இ.சர்வேஸ்வரா, உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.த.மாதவன், வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் திரு.வ.தனகோபி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

மாலை அமர்வின்போது யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஈ.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இரு அமர்வுகளின் போதும் சிறப்பு அம்சமாக மாணவர்களது கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் என்பன இடம்பெற்றன.

## இந்தியாவில் பதினொராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

கடந்த மாதம் (ஜூலை) 4ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை பத்தாவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு அமெரிக்காவின் சிகாகோ நகரில் சிறப்பாக நடந்தேறியது. இதில் இலங்கை, இந்தியா முதலான 27 நாடுகளிலிருந்து ஆறாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். மாநாட்டில் மொத்தமாக 88 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன என்ற தகவலும் வெளியாகியுள்ளது. இதில் அதிகமாக பண்பாட்டுத்துறை, கல்வெட்டுத்துறை சார்ந்த ஆய்வுகள்தான் இடம்பெற்றிருந்தன.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படவேண்டும் என்பது வழமையான செயற்பாடாகும். இந்த வகையில் பதினொராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2021ஆம் ஆண்டு இந்தியா தமிழகத்திலுள்ள கடலூர் மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு தொடரில் இரண்டாவது மாநாடு 1968ஆம் ஆண்டு தமிழகம் சென்னையிலும், ஐந்தாவது மாநாடு 1981ஆம் ஆண்டு மதுரையிலும், எட்டாவது மாநாடு 1995ஆம் ஆண்டு தஞ்சாவூரிலும் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் ஐ.பி.சி தமிழ் கலையகம்

ஐ.பி.சி தமிழ் சேவையின் கலையகம் ஒன்று கடந்த மாதம் (ஜூலை) இறுதியில் தமிழகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.சி தமிழ் சேவையின் கலையகங்கள் தமிழ் மக்கள் பரந்து வாழும் நாடுகளில் விஸ்தரிக்கப்பட்டு வரும் நிலையில் அதன் ஒருபகுதியாக சென்னை, ஆழ்வார் திருநகர், வலசரவாக்கம் பகுதியில் புதிய தொழில் நுட்ப வசதிகளுடன் இணைந்த கலையகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வின்போது உலகத்தமிழ் அறிவிப்பாளர் திரு.பி.எச்.அப்துல் ஹமீது, பாடலாசிரியர் திரு.வைரமுத்து, கஸ்பார் அடிகளார் உட்பட பல தென்னிந்திய நடிகர்களும், நேயர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திருமந்திர விருந்து நூல் வெளியீடு

கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களது திருமந்திர வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய திருமந்திர விருந்து என்ற நூலின் வெளியீட்டு விழா இம்மாதம் 11ஆம் திகதியன்று இணுவிலில் நடைபெறவிருக்கிறது.


### சிவபூமி மாதாந்த செய்திப் பத்திரிகை

**சந்தா விபரம்**

சிவபூமி - மாதாந்த செய்திப் பத்திரிகைக்கு வருடாந்த சந்தா செலுத்துவதன் மூலம் கிரமமாக பத்திரிகையை பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக ஒவ்வொரு மாதமும் பத்திரிகை அனுப்பிவைக்கப்படும்.

**சந்தாப் பணத்தை பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யலாம்.**

**Hatton National Bank - Chunnakam**
**Sivapoomi Trust - 117020080261**

சந்தாப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்த பின்னர் அது தொடர்பாக சிவபூமி அறக்கட்டளை அலுவலகத்திற்கு தெரிவிக்கவும்.

வருடாந்த சந்தா (தபாற் செலவு உட்பட)


உள்நாடு : ரூபா 600/=

வெளிநாடு : 25$ (அமெரிக்க டொலர்)

தொடர்புகளுக்கு : சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தொலைபேசி இல : 021 222 7938

## நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை,
## சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் கும்பாபிஷேக தினம்
## ஓராண்டு நிறைவு (12.07.2019, 13.07.2019)



## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் குருபூசை (12.07.2019)



Registered in the Dept.of Post of Sri Lanka Under No. QD/29/News/2019

## பரோபகாரி திரு.கிருஷ்ணர் பாலச்சந்திரன் அவர்களது மறைவுக்கு அஞ்சலி



அமெரிக்கா புளோரிடாவைச் சேர்ந்த பரோபகாரி. கொடைவள்ளல் திரு.கிருஷ்ணர் பாலச்சந்திரன் அவர்கள் கடந்த மாதம் (ஜூலை) அமெரிக்காவில் காலமானார்.

இவர் சிவபூமி முதியோர் இல்லம் ஆரம்பிப்பதற்கு பெருநிதி வழங்கி. அந்தப் பணியை தொடக்கி வைத்தவர். எம் மண்ணில் பல சமூகப் பணிகளுக்கு இப்பெருமகன் வாரிவழங்கியிருப்பதுடன். இரக்க சிந்தையோடு பலரது வாழ்வுக்கு பெரிதும் உதவியிருக்கிறார்.

கந்தரோடையை பிறப்பிடமாகக் கொண்ட இவர். ஸ்கந்தவரோதயா கல்லூரியில் கல்வி பயின்று வந்த வேளையில் புகழ்பூத்த விளையாட்டு வீரராக விளங்கியவர். பின்னர் உதவிப் பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றியவர். கடந்த முப்பது ஆண்டு காலமாக அமெரிக்காவில் வாழ்ந்துவந்தார்.

இவர் இளைப்பாறிய மாவட்ட கூட்டுறவு அதிகாரி கந்தரோடை கிருஷ்ணர் தம்பதியினரின் புதல்வனும். அளவெட்டி வித்துவான் பண்டிதர் கணேசன் தம்பதியினரின் மருமகனுமாவார்.

**அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறையருளை வேண்டி சிவபூமி அறக்கட்டளையினரும், சிவபூமி முதியோர் இல்லத்தில் வதியும் மூத்தோரும் தங்கள் இதய அஞ்சலியை சமர்ப்பிக்கிறார்கள்.**




முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கம் அவர்களது உருவச்சிலை

மாவைக் கந்தனுக்கு புதிய சித்திரத் தேர்



நல்லைக் கந்தன் கொடிச்சீலை உபயகாரரிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு



அலங்கரிக்கப்பட்ட சிறு இரதத்தில் கொடிச்சீலை எடுத்துவரப்பட்டு கையளிக்கும் நிகழ்வு





9789557420004

ISBN 978-955-7420-00-4

இந்தப் பத்திரிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது. (06 ஆகஸ்ட் 2019)